இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 193 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 11 – வெள்ளிக்கிழமை 23 பிப்ரவரி 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 193 : Thiruvalluvar Year - 2055 - Maasi 11 - Friday 23 February 2024 - Madurai 16 Pages ₹ 5.00


## புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவகம் -

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் - பிப்.26 அன்று திறப்பு!

## சட்டப் பேரவையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, பிப். 23 -**

**“சென்னை மெரினா கடற்கரையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் ஆகியவற்றின் திறப்பு விழா வருகிற 26ஆம் தேதி - திங்கட்கிழமை அன்று நடைபெறும்” என சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள்.**

அறிவாசான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் இதயத்தை இரவலாகப் பெற்ற ஒப்பாரும் மிக்காருமிலாத் தலைவர், “உடன் பிறப்பே” என்ற ஒற்றைச் சொல்லால் அழைத்து, அனைத்து தமிழ் மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீங்கா இடம் பெற்ற தன்னிகரில்லாத் தலைவர்; ஐந்து முறை முதல்வராக இருந்து நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2018 ஆகஸ்ட் 7 அன்று நம்மை விட்டுப் பிரிந்தார்கள்.

சென்னை, மெரினா கடற்கரையில் அணையாச் சுடராக துயில் கொள்ளும் பேரறிஞர் அண்ணா அவர்களின் அருகிலேயே உறங்கச் சென்ற நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கும் பணி, தலைவர் கலைஞர் அவர்களால், “உழைப்பு, உழைப்பு” எனப் போற்றப்பட்ட திராவிட மாடல் அரசின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்றபிறகு தொடங்கப்பட்டது.

கலைஞர் நினைவகம் அமைக்கும் பணியை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னின்று முனைப்புடன் மேற்கொண்டார்.

அத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவகத்தைப் புதுப்பிக்கும்



பணியும் சீரும், சிறப்புமாக நடைபெற்று நிறைவடைந்துள்ளது.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந் நினைவகம் திறப்பு நிகழ்ச்சி நடைபெறுவது, மேலும் சிறப்புச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

### டாக்டர் எழிலன் கேள்வி!

இந்நிலையில் சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது கழக உறுப்பினர் டாக்டர் நா. எழிலன்,

“போராட்டமே தன் வாழ்க்கை; வாழ்க்கையே தன் போராட்டம் என வாழ்ந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர். அவருடைய இறுதிப் பயணம் ஒரு போராட்டக் களம். அந்தப் போராட்டக் களத்தில் நிதானத்தைக் கடைப்பிடித்து, சட்டப் போராட்டம்மூலம் வென்றெடுத்து, கழகத்தினரை வழி நடத்தி, தன் ஆசிரியரான அறிஞர் அண்ணா அருகில் இடத்தை வாங்கிக் கொடுத்தவர் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். கலைஞருடைய நினைவுச் சின்னம், சமூக நீதி சின்னம்; கலைஞருடைய நினைவுச் சின்னம், மாநில உரிமைகள் சின்னம்; கலைஞருடைய நினைவுச் சின்னம், மதச்சார்பின்மைச் சின்னம். அந்த நினைவிடம் எப்போது திறக்கப்படும்?”

- என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:-

**நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற தலைவர்; (மேசையைத் தட்டும் ஒலி) நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவர்; முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடம் அமைக்கும் பணி முழுமையடைந்திருக்கிறது.**

**தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடம் மட்டுமல்ல; தலைவர் கலைஞர் அவர்களை உருவாக்கிய, நம் தாய்த் தமிழ் நாட்டிற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டிய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) நினைவிடமும் புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டிருக்கிறது;**

**அப்படிப் புதுப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவிடமும், தலைவர் கலைஞர் அவர்களுடைய புதிய நினைவிடமும் வருகிற 26ஆம் தேதி (மேசையைத் தட்டும் ஒலி) மாலை 7.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

**எதற்காக இதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், அந்த நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் எதையும் நாங்கள் அச்சிடவில்லை. அதனை ஒரு விழாவாக இல்லாமல், நிகழ்ச்சியாக நடத்திடவே நாங்கள் விரும்பியிருக்கிறோம்; முடிவெடுத்திருக்கிறோம். ஆகவே, அந்த நிகழ்ச்சியிலே இந்த அவையில் இருக்கக்கூடிய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணிக் கட்சிகள், தோழமைக் கட்சிகள் என எல்லாக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.**

**தமிழ்நாட்டு மக்களுக்கும் தங்கள் (பேரவைத் தலைவர்) மூலமாக அழைப்பு விடுத்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.2.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சென்னை மெரினா கடற்கரையில், புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவிடமும், புதிதாக கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடமும் 26.2.2024 அன்று மாலை திறந்து வைக்கப்படும் என்று அறிவித்து, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

---

## காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பே இறுதியானது!

# தமிழ்நாட்டின் ஒப்புதலின்றி மேகதாது அணை கட்ட முடியாது !

## சட்டப்பேரவையில் அமைச்சர் துரைமுருகன் திட்டவட்ட அறிவிப்பு !

**சென்னை, பிப்.23-**

**சட்டப் பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிவுற்றதும் காவிரியில் மேகதாது அணை பிரச்சினை தொடர்பாக சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, மார்க்சிஸ்ட் டி.ராமச்சந்திரன், மனித நேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா, பா.ம.க. ஜி.கே.மணி, பா.ஜ.க. வானதி சீனிவாசன் ஆகியோர் பேசினர்.**

விவாதத்திற்குப் பதிலளித்து நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசியதாவது:-

காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பே இறுதியானது. காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு நீண்டகாலம் தலைவரே நியமிக்கப்படாமல் இருந்தது. அதனால் அ.தி.மு.க. ஆட்சியில் பிரச்சினை வரவில்லை. இம்மாதம் 11ம் தேதி நடந்த கூட்டத்தில் மேகதாது பிரச்சினை வந்தது. தமிழ்நாடு அரசு சார்பில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

### எந்தவித ஓட்டெடுப்பும் நடக்கவில்லை!

காவிரி ஆணையத்தில் மேகதாது அணை பிரச்சினை பற்றி விவாதிக்க கூடாது என்று வழக்கு தொடுத்துள்ளதையும் அன்றைய கூட்டத்தில்



சுட்டிக்காட்டினோம்.

ஆனால் கர்நாடகாவோ, ‘உச்ச நீதிமன்றம் அணை கட்டும் திட்டத்துக்கு எந்த தடையும் பிறப்பிக்கவில்லை. எனவே இத்திட்டம் பற்றி விவாதித்து, முடிவெடுத்து மத்திய நீர் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கலாம்’ என்றது. மத்திய நீர் ஆணையத்தில் ஒன்றிய அரசின் சார்பில் உள்ள உறுப்பினரோ இது முடியாது என்றார். கேரளா, பாண்டிச்சேரியும் இதேபோல் விவாதிக்க முடியாது என்று தெரிவித்தன. அன்று எந்தவித ஓட்டெடுப்பும் நடக்கவில்லை. கருத்துக்கள் மட்டுமே சொல்லப்பட்டது. கர்நாடகாவை தவிர, மற்ற மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவிக்க, மேகதாது அணை திட்டத்தை திருப்பி அனுப்ப காவிரி ஆணைய தலைவர் ஒப்புக்கொண்டார்.

திருப்பி அனுப்ப ஒப்புக்கொண்ட இதே ஆணையத் தலைவரே, மேகதாது திட்ட அறிக்கையைப் பரிசீலிக்க காவிரி ஆணையத்துக்கு மீண்டும் அனுப்ப உள்ளதாக நமக்கு கடிதம் எழுதியிருந்தார். இதற்கு உடனே தமிழ்நாடு சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தை நாடவுள்ளோம். ஜல்சக்தி அமைச்சகம், வனத்துறைக்கு தமிழக அரசு சார்பில் எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுப்பப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தால் மேகதாது திட்டம் அனுமதிக்கப்படாதது என்பதை அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டது.

### கர்நாடகாவால் ஒரு செங்கலைக் கூட எடுத்துவைக்க முடியாது!

தமிழ்நாட்டின் இசைவைப் பெறாமல் மேகதாதுவில் ஒரு செங்கலைக் கூட கர்நாடகாவால் எடுத்து வைக்க முடியாது என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன். கர்நாடகாவில் இந்த விஷயத்தில் அரசியல் செய்கிறார்கள். பா.ஜ.க., காங்கிரஸ் என யார் வந்தாலும் இதைத்தான் செய்கிறார்கள். சித்தராமையா எனக்கு வேண்டியவர் தான். அவரும் அப்போது இருந்தே இந்த விஷயத்தில் இப்படித்தான் செய்கிறார். அவர்கள் நிதி ஒதுக்கினாலோ, மேகதாதுவை கட்டியே தீருவோம் என்று ஆவேசமாக வசனம் பேசினாலோ அச்சப்படத் தேவையில்லை. காரணம் தமிழ்நாட்டின் இசைவின்றி அனுமதியை பெற முடியாது. தமிழ்நாட்டில் பிறந்த யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும் மேகதாதுவுக்கு அனுமதியை தர மாட்டார்கள். எனவே அஞ்சத் தேவையில்லை.

உங்களுக்கு காங்கிரஸ் உடன் கூட்டணி இருக்கிறதே பேசக்கூடாதா என்கிறார்கள். பேசக்கூடாது என்பதே திட்டம். காரணம் பேசிப்பேசி அலுத்துப் போய் தான் இந்த முடிவை எடுத்துள்ளோம். இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிக்கு எவ்வளவு அக்கறை, ஆர்வம், வேகம் இருக்கிறதோ அதே வேகம், அதே அக்கறை, அதே உணர்வு எங்களுக்கும் உண்டு.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலளித்தார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 23-02-2024

# சண்டிகர் தீர்ப்பு மகத்தானது

கடந்த பிப்ரவரி 1ஆம் தேதி வெளியான தலையங்கத்துக்கு ‘குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்..’ என்று தலைப்பு சூட்டப்பட்டு இருந்தது. அந்தத் தலையங்கத்தின் நோக்கத்தை அப்படியே எதிரொலித்து இருக்கிறது உச்சநீதிமன்றம்!

ஆம் ஆத்மி – காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு விழுந்த வாக்குகளை, செல்லாது என்று ஆக்கி – பா.ஜ.க. வேட்பாளரை, செல்லும் என்று கடைந்தெடுத்த மோசடித்தனத்தை அரங்கேற்றினார் தேர்தல் அதிகாரி. பா.ஜ.க. வேட்பாளர் தேர்வை ரத்து செய்து, ஆம் ஆத்மி – காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெற்றவராக அறிவித்து விட்டது உச்சநீதிமன்றம். இதனைவிட மகத்தான தீர்ப்பும் இருக்க முடியாது. இதனைவிட பா.ஜ.க.வுக்குப் பின்னடைவும் இருக்க முடியாது. இதற்கெல்லாம் வெட்கம், ரோஷம் இருக்கும் கட்சி அல்ல பா.ஜ.க.

சண்டிகர் மேயர் தேர்தலில் ஆம் ஆத்மியும், காங்கிரஸும் கூட்டணி அமைத்து ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை களத்தில் இறக்கியது. தேர்தல் முறையாக நடந்தால் ‘இந்தியா’ கூட்டணிதான் வெற்றி பெறும். எனவே, தேர்தலையே தள்ளி வைத்தார்கள். சனவரி 26ஆம் தேதியன்று திருச்சியில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் மாநாட்டில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதனைச் சுட்டிக் காட்டினார்கள்.

“நாம் ஒற்றுமையாக நின்றுவிட்டாலே, அது பா.ஜ.க.வை மனரீதியாக பலவீனப்படுத்தி விடும். ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

சண்டிகர் மாநகர மேயரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடக்க இருந்தது. ஆம் ஆத்மி கட்சியும், காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. பா.ஜ.க.வுக்கு 14 கவுன்சிலர்கள் ஆதரவு இருந்தது. ஆம் ஆத்மி கட்சிக்கு 13 உறுப்பினர்கள் ஆதரவு இருந்தது. காங்கிரஸ் கட்சிக்கு 7 உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆம் ஆத்மியும், காங்கிரசும் இணைந்து போட்டியிட்டதால் மேயர் பதவியை ‘இந்தியா’ கூட்டணி கைப்பற்றும் நிலைமை உருவானது. ‘இந்தியா’ கூட்டணியின் முதல் வெற்றியாக இது அமையப் போகிறது என்று வட மாநில ஊடகங்கள் எழுதினார்கள். உடனே என்ன செய்தார்கள் தெரியுமா? தேர்தலையே ரத்து செய்ய வைத்து விட்டார்கள். தேர்தல் நடந்திருந்தால் ‘இந்தியா’ கூட்டணிதான் வென்றிருக்கும். ஒரு மேயர் தேர்தலையே கேன்சல் செய்கிறார்கள் என்றால், பா.ஜ.க.வுக்கு ஏற்பட்டுள்ள பயத்தை இந்தியக் கூட்டணித் தலைவர்கள் உணர்ந்தாக வேண்டும்.” என்று முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கையுடன் சொன்னார்கள்.

இதற்கு மாறாக சண்டிகர் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றதாக தேர்தல் அதிகாரி அறிவித்தார். இதனைத்தான் ‘முரசொலி’யின் முந்தைய தலையங்கத்தில் நடந்து விட்ட மோசடியைக் கடுமையாகக் கண்டித்திருந்தோம்.

“பா.ஜ.க.வுக்குத் தெரிந்தது நேரிய வழியல்ல, குறுக்கு வழி மட்டும்தான். அவர்கள் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருப்பது அப்படித்தான். இதுதான் பா.ஜ.க.வுக்கு தெரிந்த ஒரே வழியாகும். அதைத்தான் மெய்ப்பித்திருக்கிறது சண்டிகர் மேயர் தேர்தல். பெரும்பான்மை பெற்று மேயராக ஆகி இருக்க வேண்டிய கட்சி ஆம் ஆத்மி ஆகும். ஆனால் கோல்மால் வேலைகளைப் பார்த்து மேயர் பதவியைக் கைப்பற்றி இருக்கிறது பா.ஜ.க.

பா.ஜ.க. எப்படி வென்றது? ஆம் ஆத்மியைச் சேர்ந்தவர்கள், காங்கிரசைச் சேர்ந்தவர்கள் பா.ஜ.க.வுக்கு கட்சி மாறி விட்டார்களா? இல்லை. மாறாக, அவர்கள் அளித்த வாக்குகளைச் செல்லாது என்று ஆக்கிவிட்டு, பா.ஜ.க. வென்றதாக அறிவித்துவிட்டார்கள். இதை விட மகா கேவலம் இருந்திருக்க முடியுமா? சண்டிகர் மாநகராட்சியில் மொத்தமுள்ள 35 இடங்களில் காங்கிரஸ் ஆம் ஆத்மி கூட்டணி 20 இடங்களைப் பெற்றுள்ளது. பா.ஜ.க 14 கவுன்சிலர்களையும், சிரோன்மணி அகாலிதளம் ஒரு கவுன்சிலரையும் பெற்றுள்ளது. மேயர் பதவியை ஆம் ஆத்மி கட்சியும், இரண்டு துணை மேயர் பதவிகளை காங்கிரஸ் கட்சியும் பிரித்துக் கொண்டு கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. ‘இந்தியா’ கூட்டணி வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் இது. தேர்தலில் காங்கிரஸ் – ஆம் ஆத்மி கூட்டணி 20 வாக்குகளையும், பா.ஜ.க. 16 வாக்குகளையும் பெற்றது. ஆனால் 8 வாக்குகளை செல்லாது என அறிவித்து பா.ஜ.க. குறுக்கு வழியில் வெற்றி பெற்றது. பா.ஜ.க.வின் மகா திருட்டுத்தனம் அல்லவா இது? மோடி தேர்தலா, மோசடித் தேர்தலா என்று எதிர்க்கட்சிகள் கேட்பது உண்மைதானே?

ஒரே ஒரு மேயர் தேர்தலிலேயே இத்தனை மோசடிகள் – முறைகேடுகள் – தில்லுமுல்லுகள் என்றால், நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் பா.ஜ.க.வின் செயல், எந்த அளவிற்கு இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒற்றுமையின் மூலம் மட்டுமே இத்தகைய மோசடித்தனங்களை வீழ்த்த முடியும்” – என்று நாம் அந்தத் தலையங்கத்தில் குறிப்பிட்டு இருந்தோம்.

ஆம் ஆத்மி – காங்கிரஸ் கூட்டணியின் மேயர் வேட்பாளர் குல்தீப் குமார், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். தேர்தல் அதிகாரி அனில் மாஷி, வாக்குச் சீட்டில் குறியீடு செய்து செல்லாததாக ஆக்கியது உண்மைதான் என்று நீதிபதிகள் முன் ஒப்புக் கொண்டார். ‘குறியீடு மட்டும் செய்யவில்லை, அந்த வாக்குச் சீட்டில் வரி வரியாக எழுதி இருக்கிறார் தேர்தல் அதிகாரி’ என்று நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள். ‘ஆம் ஆத்மிக்கு வாக்களிக்கப்பட்ட வாக்குச் சீட்டில் மட்டுமே இதனை தேர்தல் அதிகாரி எழுதி உள்ளதால் அதனை குற்றச் செயலாகக் கருதவேண்டும்’ என்று தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு கூறியது. சண்டிகர் தேர்தலில் பா.ஜ.க. அடைந்த வெற்றியையே ரத்து செய்தது உச்சநீதிமன்றம்.

**சிதைக்கப்பட்ட எட்டு வாக்குச் சீட்டுகளின் வாக்குகளையும் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளருக்கு வழங்கி அவரை வெற்றி பெற்றவராக நீதிபதிகள் அறிவித்தார்கள். சண்டிகர் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் மகத்தான தீர்ப்பை அளித்தது. முறைகேடு செய்த தேர்தல் அதிகாரி தண்டனைக்கு உள்ளாவார். அவரை முறைகேடு செய்யத் தூண்டியவர்களுக்கு என்ன தண்டனை?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.2.2024) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டிற்கான மேலிடப் பொறுப்பாளர்கள் அஜய் குமார் மற்றும் ஸ்ரீவெல்ல பிரசாத் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை மற்றும் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### கணினித் திரை உள்பட பல பெரிய திரைகளிலும் இணையதளத்திலும் காணலாம்!

# பள்ளி மாணவர்களுக்கென அரசு வெளியிட்ட ‘மணற்கேணி’ செயலி!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

*சென்னை, பிப். 23-*

பள்ளி மாணவர்களுக்கென தமிழ்நாடு அரசு வெளியிட்ட மணற்கேணி செயலி புதிய வடிவமெடுத்திருக்கிறது. காணொலிப் பாடங்கள் அடங்கிய மணற்கேணியை இனி கணினித் திரை உட்பட பல பெரிய திரைகளிலும் இணையதளத்திலும் காணலாம். மணற்கேணி இணையதளத்தை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.

கல்வியையும் கற்றல் முறையையும் ஜனநாயகப் படுத்தும் செயல்திட்டத்தை நமது பள்ளிக் கல்வித் துறை இலக்காகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் பயிலும் அனைத்து மாணவர்களும் உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் என்கிற நோக்கத்துடனும், அரசுப் பள்ளி மாணவர்கள் உயர்கல்விக்குச் செல்வதை எளிதாக்கி சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வை சரிசெய்து சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்கிற இலக்குடனும் தமிழ்நாடு அரசு 2023 ஆம் ஆண்டில் மணற்கேணி செயலியை அறிமுகப்படுத்தியது. பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களுக்கு மட்டுமே காணொலிப் பாடங்கள் கிட்டும் என்கிற நிலையைப் போக்கி அவற்றை அனைவருக்குமானதாக மாற்றுவதே அரசின் நோக்கம்.

மணற்கேணி ஆசிரியர்களுக்கு துணைக் கருவியாக பயன்படக்கூடிய ஒன்று. மணற்கேணி செயலியை தரவிறக்கம் செய்து அதில் உள்ள பாடங்களை மாணவர்களுக்கு வகுப்பறையில் உள்ள ஸ்மார்ட் போர்டில் திரையிட்டுக் காட்டி பாடங்களை நடத்தி வந்த ஆசிரியர்கள் இனி இணையதளம் வாயிலாக பாடங்களை நடத்தலாம். காட்சி ரீதியாக பாடங்கள் இருப்பதால் மாணவர்களுக்கு கற்றல் மேலும் எளிதாகும்.

மணற்கேணி செயலி உலகின் எந்த எந்த மூலையில் இருந்தும் ஆசிரியர்கள் மாணவர்கள் என எவர் வேண்டுமானாலும் பயன்படுத்தும் வகையில் ஓபன் சோர்ஸ் ஆக வெளியிடப்பட்டது. இப்போது இணையதளம் மூலமாகவும் பயன்படுத்தலாம் என்பதால் அலைபேசி வாயிலாகவும் கணினி வாயிலாகவும் இதனை பயன்படுத்தலாம். இதன் எளிமையான பயன்பாடு இதன் நோக்கத்தை பறைசாற்றும்.

இணையதளத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் என இரு மொழிகளிலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை மாநிலப் பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களை பல பாடப்பொருள்களாக, வகுப்புகள் தாண்டி வகைபிரித்து அதற்கேற்றபடி காணொலி வாயிலான விளக்கங்களை உருவாக்கி அளித்திருக்கிறது கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில் (எஸ்.சி.இ.ஆர்.டி) நிறுவனம். இதன்கீழ் உருவாக்கப்பட்டுள்ள காணொலி கள் பாடப்பொருள்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

6, 7, 8, 11, 12 ஆகிய வகுப்புகளுக்கான அறிவியல், கணிதம், ஆங்கிலம், இயற்பியல், வேதியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் முதற்கட்டமாக பாடப்பொருள்கள் காணொலியாக தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காணொலியின் முடிவிலும் வினாடி வினா வாயிலாக மாணவர்களின் புரிதல் திறனை சரி பார்க்கும் வசதியும் உள்ளது. இதன் மூலம் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நடத்திய பாடம் முறையாகப் புரிந்திருக்கிறதா என சரி பார்த்துக்கொள்ள முடியும். முதல் கேள்வி எளிமையாகத் தொடங்கி படிப்படியாக விடையளித்துக் கொண்டே வருகையில் கொஞ்சம் கொஞ்சமாக கேள்விகளின் கடினத் தன்மை கூடிக் கொண்டே வரும். ஒவ்வொரு கேள்விக்குமான விரிவான விடைகளும் காணக் கிடைக்கும். ஏதேனும் ஓரிடத்தில் மாணவர்களுக்கு புரிந்து கொள்ள சிரமமாக உள்ளது எனில் ஆங்காங்கே அவர்களுக்கான உதவிக் குறிப்புகளும் உண்டு.

மணற்கேணியில் உள்ள காணொலிப் பாடங்கள் முறையான கற்றல் பயணத்திற்கு வழிவகுக்கின்றன. *Laddered Learning approach* எனப்படும் அணுகுமுறை இதில் கையாளப்பட்டுள்ளது. அதாவது எடுத்துக்காட்டாக, பன்னிரண்டாம் வகுப்பில் வரும் ஒரு பாடப்பொருளை முறையாகப் புரிந்து கொள்ள ஆறாம் வகுப்பில் அதற்கான அடிப்படைப் பாடம் இருக்கிறது என்றால் அதைப் படித்துப் புரிந்து கொண்டுவிட்டு பின் ஏழாம் வகுப்பில் அது குறித்துப் பாடமிருந்தால் அதையும் படித்துவிட்டு படிப்படியாக பன்னிரண்டாம் வகுப்புப் பாடப்பொருளுக்கு வரலாம். இதன்மூலம் பாடங்களை எளிதில் புரிந்துகொள்வதற்கும் எதையும் விட்டுவிடாமல் படிப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

திரையில் தொழில்நுட்பக் கலைச் சொற்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் காணலாம். கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாட்டை மணற்கேணி மிகவும் மகிழ்ச் சிகரமானதாக மாற்றும்.

இப்படிப் பயிற்றுவிப்பதன் வாயிலாக பொதுத் தேர்வில் கேட்கப்படும் எந்த வகையான கேள்விகளுக்கும் மாணவர்கள் எளிதாக விடையளிக்க முடியும். அது மட்டுமல்லாமல் ஜே.ஈ.ஈ போன்ற அகில இந்திய நுழைவுத் தேர்வுகளுக்கும் எளிதில் தயாராக முடியும். கடந்த பல ஆண்டுகளில் கேட்கப்பட்ட வினாக்கள் அடங்கிய வினா விடை வங்கி ஒன்றும் உண்டு. போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள், கல்வி உதவித்தொகைக்கான தேர்வுகள் என அனைத்தையும், மணற்கேணியை துணைக்கருவியாகக் கொண்டு பாடங்களை கற்பிப்பதன் மூலம் மாணவர்களை மிக எளிதாக ஆசிரியர்கள் வெற்றிகொள்ள வைக்க முடியும்.

இந்தக் காணொலிகள் 2டி மற்றும் 3டி அனிமேஷன் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன என்பதால் கற்போர் உடனடியாகப் புரிந்து கொள்வதற்கும் புரிந்து கொண்டவற்றை நீண்ட காலம் நினைவில் வைத்துக் கொள்வதற்கும் உகந்தவை.

சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்ளும் விளக்கப்படங்கள் உள்ளதாலும் கற்றல் முற்றிலும் ஜனநாயகப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அனைத்துக் காணொலிகளையும் கேள்விகளையும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். அவற்றை தரவிறக்கம் செய்து கொள்ள கடவுச்சொல் எதுவும் தேவையில்லை. எந்தத் தடையும் இன்றி மிக எளிதாக அவற்றை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மணற்கேணி இணையதள முகவரி :

*https://manarkeni.tnschools.gov.in*

அலைபேசியில் மணற்கேணி செயலியை ப்ளே ஸ்டோரில் தேடவேண்டுமெனில் *TNSED Manarkeni* என்று உள்ளீடு செய்து தேடவேண்டும். இதுவரையிலும் 2,00,000 முறை இச்செயலி தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது உருவாக்கப்பட்ட மணற்கேணி இணையதளம் வாயிலாக இன்னும் அதிகமானோரை இக்காணொலிகள் சென்று சேரும்.

இவ்வாறு பள்ளிக் கல்வித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### திருவாரூர் – தஞ்சை மாவட்ட மக்களின் கனவுத்திட்டமான

# நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் அடிக்கல்நாட்டு விழா!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்பு !

*திருவாரூர், பிப். 23-*

திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட மக்களின் நீண்டநாள் கனவு திட்டமான நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் திட்டம் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜாவின் தொடர்முயற்சியால் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி இன்று (23.02.2024 - வெள்ளிக்கிழமை) காலை அடிக்கல் நாட்டப்படுகிறது. தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைஅமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் பங்கேற்று அடிக்கல் நாட்ட இருக்கின்றனர்.

திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்ட மக்கள் மற்றும் வர்த்தகர்கள் என அனைத்துத் தரப்பினரும் நீடாமங்கலம் ரயில்வே கேட் மூடப்படும் நேரங்களில் நீண்ட நேரம் காத்திருந்து அவதிப்பட்டு வந்தனர். ஆம்புலன்ஸ் கூட போகமுடியாமல் வாகனப்போக்குவரத்து தடைப்படும் . இந்த நிலையில் கடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. அரசின் சார்பில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான முழு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்கிற தேர்தல் வாக்குறுதி தரப்பட்டிருந்தது.

முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோரின் தொடர் முயற்சிகளால் திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல வாழ்த்துக்களுடனும் தற்போது நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் நிறைவேற்றும் பணி தொடங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் தொழில்முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா எடுத்த பெரும் முயற்சியின் பலனாக இன்று (23.02.2024 - வெள்ளிக்கிழமை) காலை நீடாமங்கலம் ரயில்வே மேம்பாலம் பணிகளுக்காக அடிக்கல் நாட்டும் விழா நடைபெறுகிறது.

இந்த விழாவில் அரசியல், வர்த்தகம், ஆன்மீகம் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசுத் துறை அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள், ஊராட்சி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என பெருந்திரளானோர் பங்கேற்கின்றனர்.




நேற்று (22.02.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் ஊரகப்பகுதிகளில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்கிட பள்ளிக் கல்வித்துறைக்கும், சிவ் நாடார் அறக்கட்டளைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் ஆர்,சுதன் ராமசாமி, சிவ்நாடார் அறக்கட்டளை நிர்வாகிகள் சுந்தர், பேனர்ஜி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காவல் துறை சார்பில்

# ரூ.23.53 கோடி செலவில் 96 காவலர் குடியிருப்புகள், நான்கு காவல் நிலையங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப்.23 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 23 கோடியே 53 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள், நான்கு காவல் நிலையங்கள் மற்றும் சென்னை, அசோக் நகரில் சிலை கடத்தல் பிரிவு காவல் நிலையம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

காவல்துறை என்பது, குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாநிலத்தின், அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை, ரூ.438.05 கோடி செலவில் 2637 காவலர் குடியிருப்புகள், ரூ.36.64 கோடி செலவில் 36 காவல் நிலையக் கட்டடங்கள், ரூ.69.83 கோடி செலவில் 14 காவல்துறை இதரக் கட்டடங்கள், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் ரூ.55.19 கோடி மதிப்பிலான 253 குடியிருப்புகள் ஆகியவற்றை காவல்துறையினரின் மேம்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக நேற்று, கோயம்புத்தூர் மாவட்டம் - வி.எச். ரோட்டில் 16 கோடியே 57 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள்;

கோயம்புத்தூர் மாவட்டம் - இரத்தினபுரியில் 2 கோடியே 21 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், சென்னை மாவட்டம் - நந்தம்பாக்கத்தில் 1 கோடியே 46 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம் - மழையூரில் 83 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டில்

1 கோடியே 18 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செங்கல்பட்டு தாலுக்கா காவல் நிலையம் மற்றும் சென்னை மாவட்டம் - அசோக் நகரில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிலை கடத்தல் தடுப்பு பிரிவு காவல் நிலையம் என மொத்தம் 6 கோடியே 95 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நான்கு காவல் நிலையங்கள் மற்றும் ஒரு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு காவல் நிலையம்;

என மொத்தம், 23 கோடியே 53 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள், நான்கு காவல் நிலையங்கள் மற்றும் ஒரு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு காவல் நிலையம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் வி. பாலகிருஷ்ணன் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர்.

---

பொள்ளாச்சி

# வடசித்தூர் கிளை முக்கியக் கால்வாய்கள் அனைத்தும் தூர் வாரப்படும்!

## சட்டப்பேரவையில் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உறுதி!



**சென்னை, பிப். 23 -**

**"பொள்ளாச்சி வடசித்தூர் கிளை முக்கியக் கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்படும்!" என, சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உறுதியளித்தார்.**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், கேள்வி நேரத்தில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:**

**பொள்ளாச்சி வி.ஜெயராமன் :** பொள்ளாச்சிவடசித்தூர் கிளை வாய்க்காலைத் தூர்வார அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** வடசித்தூர் கிளை வாய்க்கால் தூர்வாரப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, தூர்வாரி இருக்கிறோம். தூர்வாரிக் கொண்டிருக்கிறோம். அதில் இரண்டு பகுதிகள் உள்ளன. மொத்தம் சுமார் 10,150 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. அதில் சுமார் பாதியளவிற்கு 2022-2023 ஆம் ஆண்டில் 17 இலட்சம் ரூபாயில் தூர்வாரப்பட்டது. தற்போது, இந்த நிதியாண்டில் அடுத்த பகுதியைத் தூர்வாருவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆகையால், பொதுவாக PAPன் மொத்த கால்வாயையும் தூர்வார வேண்டுமென்று தற்போது DPR தயார் செய்திருக்கிறோம். அதில் 17 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அனுமதி கிடைத்த பிறகு, PAPன் முக்கியக் கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பொள்ளாச்சி வி.ஜெயராமன்:** வடசித்தூர் கிளை வாய்க்காலை முழுமையாகத் தூர்வாரி, வேறு என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து, கடைமடை வரை பாசனம் சென்றடையத்தக்க வகையில் நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பணிகளைச் செய்து கொடுப்பார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** அதிகாரிகள் கொடுத்த புள்ளி விவரத்தை நான் இங்கே சொல்கிறேன். ஆனால், அவர் அந்த இடத்திலே வசிக்கிற அனுபவத்தின் அடிப்படையில் அதைச் சொல்கிறார். எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும், கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொள்ளாச்சி வி.ஜெயராமன்:** மிக்க நன்றி ஐயா. பரம்பிக்குளம்ஆழியாறு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பாட்டிற்கு வந்து ஏறத்தாழ 60 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1965 ஆம் ஆண்டு முதல் நீர்ப்பாசனம் பெற்று வருகிறது. அதனுடைய மேல்மடையிலிருந்து கடைமடை வரையிருக்கிற அனைத்து வாய்க்கால்களும், பரம்பிக்குளம் மெயின் வாய்க்கால், திருமூர்த்தி அணையிலிருந்து வெள்ளக் கோவில் கடைசி வரையில் 123 கி.மீ. நீளமுள்ள மெயின் வாய்க்கால் முழுவதுமாக தூர்வாரப்பட்டு, செப்பனிடப்பட்டு அதனுடைய கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டும்.

தற்போது 1,100 கன அடி தண்ணீர் போகிற அளவிற்கு இருக்கிற கொள்ளளவை, மேலும் அதிகமாகப் போகும் வகையில், அனைத்து கிளை வாய்க்கால்களையும் (distributary channels) முழுமையாகக் கம்பி கட்டி, கான்கிரீட் போட்டு, மொத்தம் 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கும் தடையின்றி தண்ணீர் சென்றடையும் வகையில், அமைச்சர் அவர்கள் எனக்கு பதிலளித்ததுபோல், முழுமையாக அணையினுடைய மேல் பகுதியி லிருந்து கடைமடை வெள்ளக்கோவில் வரை இருக்கிற அனைத்து பகுதிகளிலும்,

பிரதான வாய்க்கால் உட்பட, கிளை வாய்க்கால்கள் வரை, அனைத்தையும், முழுமையாகக் கம்பிக் கட்டி, கான்கிரீட் போட்டு, தண்ணீர் வீணாகாமல் விவசாயிகளுக்கு dam to root, அணையிலிருந்து பயிரின் வேர் வரை தண்ணீர் செல்லத்தக்க வகையில், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தத்தக்க வகையில், ஒரு நல்ல திட்டத்தை, அனுபவம் வாய்ந்த நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** தெளிவாக, விளக்கமாகவே சொல்கிறேன். எனக்கே அதனுடைய முழு விவரம் தெரியும். எந்தெந்த வாய்க்கால்கள் அடைப்பட்டிருக்கின்றன; எந்தெந்த வாய்க்கால்களினுடைய tail endக்கு தண்ணீர் செல்லவில்லை என்பதும் எனக்குத் தெரியும். ஆகையினால்தான், நான் ஆரம்பத்திலே சொன்னேன், PAPயினுடைய மொத்த வாய்க்கால்களை, கிளை வாய்க்கால்கள் உட்பட, PAPயினுடைய main canalலிருந்து எல்லாவற்றையும் தூர்வார வேண்டும். உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 55 வருடங்கள் ஆகிவிட்டன. காட்டூர் canalல்கூட அதெல்லாம் உடைந்து போயிருந்தன. அதையும் சீர் செய்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், காட்டூர் canalக்குள்ளே jeepலே அந்த ஒரு பகுதியிலிருந்து மறுபடி இந்த பகுதி வரையிலே நானே பயணம் செய்து பார்த்துவிட்டு, அந்தக் கால்வாயைச் சீர் படுத்தி இருக்கிறேன். எனவே, அதிலே உறுப்பினருக்கு எவ்வளவு அக்கறை உண்டோ, அதே அக்கறை அரசுக்கும் உண்டு.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# 15,471 சிறுவணிகர்களுக்கு ரூ.26.21 கோடி கடன் வழங்கல்!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



*சென்னை, பிப். 23 -*

*கூட்டுறவுத்துறையின் "முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" மூலம் மிக்ஜாம் புயல் மற்றும் பெருமழையினால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 15,471 சிறுவணிகர்களுக்கு ரூ.26.21 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தமிழ்நாட்டில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் வீசிய "மிக்ஜாம்" புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன.*

*முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, "மிக்ஜாம்" புயல் மற்றும் பெருமழையினால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட சிறு வணிகர்களின் தொழில் பயன்பாட்டிற்கான இயந்திரங்களை பழுதுபார்க்கவும் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க, அரசு ஆணை வெளியிடப்பட்டு "முதலமைச்சரின் சிறப்பு சிறு வணிகக் கடன் திட்டம்" எனும் புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.*

*சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் சென்னையில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமும் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமும் 4 % வட்டியில் அதிகபட்ச கடன் தொகை ரூ.10,000/ வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இக்கடனை 50 வாரங்களில் வாரந்தோறும் ரூ.200/ என்ற அடிப்படையில் ஒரு வருட காலத்திற்குள் 4% வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் அல்லது மாதந்தோறும் ரூ.1000/ வீதம் உரிய வட்டியுடன் திருப்பி செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டது.*

*மேலும், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் டிசம்பர் 2023 இல் பெய்த பெரு மழை காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவணிகர்களுக்கு ரூ.10,000 வரை 4% வட்டிவீதத்திலும், ரூ.10,001 முதல் ரூ.1,00,000 வரை 10% வட்டிவீதத்திலும் (பயனாளிகளிடமிருந்து 6% வட்டியும், அரசிடமிருந்து 4% வட்டி மானியமாகவும் பெறப்படும்), தூத்துக்குடி மாவட்டத்தின் ஏரல் மற்றும் ஆத்தூர் நகரங்களில் உள்ள சிறுவணிகர்களுக்கு ரூ.100,000 முதல் ரூ.3,00,000 வரை 8.50% வட்டி வீதத்தில் கடன் வழங்கவும் அரசாணை வெளியிடப்பட்டது.*

*அதன்படி, சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 17.02.2024 வரை ரூ.10,000 வரையிலான கடன்களை 11,949 சிறுவணிகர்கள் ரூ.1,194.35 இலட்சம் அளவிற்கும், ரூ. ரூ.10,001 முதல் ரூ.1,00,000 வரையிலான கடன்களை 3480 சிறுவணிகர்கள் ரூ.1383.77 இலட்சம் அளவிற்கும், இதுமட்டுமின்றி ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் மேலான கடன்களை 42 சிறுவணிகர்கள் ரூ.43.00 இலட்சம் அளவிற்கும் ஆக மொத்தம் 15,471 சிறுவணிகர்கள் ரூ.26.21 கோடி அளவிற்கு கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.*

*மேலும் மிக்ஜாம் புயல் மற்றும் பெரு மழை பாதிப்பிற்கு பின்பு மேற்கண்ட 8 மாவட்டங்களில் பயிர்க்கடன் 67,293 நபர்களுக்கு ரூ.421.20 கோடி, (சென்னை தவிர) கேசிசி கால்நடை கடன் 9,700 நபர்களுக்கு ரூ.64.58 கோடி (சென்னை தவிர), மத்திய கால வேளாண் கடன் 608 விவசாயிகளுக்கு ரூ.13.03 கோடி, மகளிர் சுய உதவி குழுக்கடன் 2,130 நபர்களுக்கு ரூ.151.64 கோடி, TABCEDCO கடன் 218 நபர்களுக்கு ரூ3.47 கோடி, TAMCO கடன் 175 நபர்களுக்கு ரூ.2.25 கோடி, NHFDC கடன் 293 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.12 கோடி, தாட்கோ கடன் 187 நபர்களுக்கு ரூ7.09 கோடி, சிறுவணிக கடன் 10,948 சிறுவணிகர்களுக்கு ரூ.36.62 கோடி, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன கடன் (MSME) 614 பயனாளிகளுக்கு ரூ.3.73 கோடி, பணிபுரியும் மகளிர் கடன் 156 மகளிருக்கு ரூ.5.71 கோடி, மகளிர் தொழில் முனைவோர் கடன் 503 மகளிருக்கு ரூ.2.44 கோடி ஆக மொத்தம் 92,825 நபர்கள் ரூ.712.87 கோடி அளவிற்கு கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.*

*மேலும், தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த சிறப்பு கடன் முகாம்களில், சிறுவணிகர்கள் வங்கிக் கிளைகளை நேரில் அணுகியோ அல்லது உரிய ஆவணங்கள் மற்றும் விவரங்களை கூட்டுறவுத் துறையின் வலைதளத்தில் உள்ள இணையவழி விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தோ பயனடையுமாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கேட்டுக் கொண்டுள்ளார்.*

---

துவாக்குடியில் இருந்து விமான நிலையம் வரை செல்லும் அரை வட்டப் பகுதியில் - தேசிய நெடுஞ்சாலை ஆணையம்

# சுங்கச்சாவடி அமைக்கும் பணியைத் தடுத்து நிறுத்துவீர்!

## பொதுப்பணித்துறை அமைச்சருக்கு - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!



*சென்னை, பிப். 23 -*

*சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், கேள்வி நேரத்தின்போது, பள்ளிக் கல்வித் துறை தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும் முன்னர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது தொகுதிக்குட்பட்ட துவாக்குடியில் இருந்து விமான நிலையம் வரை செல்கிற அரை வட்டப் பகுதியில், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) சுங்கச்சாவடி அமைக்கும் பணியில் இறங்கியிருப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும்!" என வேண்டுகோள் விடுத்தார்.*

*சட்டப்பேரவையில் - இதுகுறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டதாவது:*

*என்னுடைய தொகுதி சார்ந்த ஒரு பிரச்சினையை நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*என்னுடைய தொகுதியில் இருக்கின்ற துவாக்குடியில் இருந்து விமான நிலையம் வரை செல்கின்ற அரை வட்டப் பகுதியில் இருக்கின்ற, NHAI மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற Toll Gate, அதில் வசூல் செய்கின்ற பணியில் இன்றைக்கு ஒன்றிய அரசு இறங்கியிருக்கிறது. அதைக்கூட, இன்னும் இரண்டு நாட்களில் மாற்றுக் கட்சியைச் சாந்திருக்கின்றவர்கள் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்த இருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.*

*மாற்றுக் கட்சியாக இருந்தாலும், அவர்களும் எங்களுடைய தொகுதி மக்கள் தான் என்கின்ற வகையில், அதை உடனடியாகத் தடுத்து நிறுத்துகின்ற பணியில் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் NHAIயைச் சார்ந்திருக்கின்ற அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்கின்ற வேண்டுகோளை வைக்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.*

---

தண்டராம்பட்டு தொகுதி முன்னாள் கழக சட்டமன்ற உறுப்பினர் - முன்னாள் எம்.பி.,

# மொழிப்போர்த் தியாகி த.வேணுகோபால் மறைவு!

## சட்டப்பேரவையில் இரங்கல்!



*சென்னை, பிப். 23 -*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தண்டராம்பட்டு தொகுதி முன்னாள் கழக சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் எம்.பி. த. வேணுகோபால் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.*

*இதுதொடர்பாக, நேற்று முன்தினம் காலை, சட்டப் பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த இரங்கல் குறிப்பு வருமாறு :-*

*தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான மொழிப் போர் தியாகி த. வேணுகோபால் அவர்கள் 15-2-2024 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*த.வேணுகோபால் அவர்கள் 1977-1980 மற்றும் 1980-1984 ஆகிய ஆண்டுகளில் தண்டராம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1996-1997, 1998-1999, 1999-2004, 2004-2009 மற்றும் 2009-2014 ஆகிய ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும் திறம்பட பணியாற்றினார்கள்.*

*இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

---

மருத்துவர்களை, நகராட்சிகளில் உள்ள அர்பன் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் நியமித்து

# மக்களுக்கான சேவை தடையின்றி தொடர வழி ஏற்படுத்துவீர்!

## சட்டப் பேரவையில் டாக்டர் நா.எழிலன் கோரிக்கை!



**சென்னை, பிப். 23 -**

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை யில் இருக்கின்ற மருத் துவர்களை, நகராட்சித் துறைகளில் உள்ள Urban Primary Health Centresகளில் நியமித்து நிரந்தரமாக மக்களுக்கான சேவை தடையில்லாமல் தொடர அரசு வழி ஏற்படுத்துமா என சட்டப் பேரவையில் டாக்டர் நா.எழிலன் கேள்வி எழுப்பினார்.**

*இது குறித்து சட்டப் பேரவையில் அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:*

**டாக்டர் நா. எழிலன்**: *நகராட்சியிலும், Urban Primary Health Centresகளிலும் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களை நியமிக்கின்றோம். அப்படி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் மருத்துவர்கள் நிரந்தரமாக பணியில் இல்லாமல் இருக்கின்ற நிலை ஏற்படுகிறது. (குறுக்கீடு) நகராட்சி சம்பந்தப்பட்ட கேள்வி தான். நகராட்சியில் இருக்கின்ற Urban Primary Health Centres குறித்தது. அதே போன்று, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஆண்டுக்காண்டு, மேற்படிப்பு முடித்த மருத்துவர்களை bond period வைத்து extend செய்து வருகின்றோம். அப்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் இருக்கின்ற மருத்துவர்களை, நகராட்சித் துறையில் உள்ள Urban Primary Health Centresகளில் நியமித்தால் நிரந்தரமாக மக்களுக்கான சேவை தடையில்லாமல் தொடர்வதற்கு வழி ஏற்படுத்தப்படுமா என்று கேட்டு, அமர்கின்றேன்.*

**அமைச்சர் கே.என். நேரு**: *உறுப்பினர் சொல்கின்ற கருத்து நல்ல கருத்துதான். ஆனால், நகராட்சிக்கு என்று தனியாக 500க்கும் மேற்பட்ட மருத்துவர்களையும், செவிலியர்களையும் தேர்வு செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. விரைவிலே அதற்கான அழைப்புகள் அனுப்பப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, நேரடியாக மருத்துவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள். அப்படி பணிய மர்த்தப்படும்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் மீண்டும், மீண்டும் பணி நீட்டிப்பு தருவதுபோல் மாநகராட்சியிலும் பணி நீட்டிப்பு தருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.*

---



## சேலம் மாவட்டம் - காவிரி ஆற்றின் குறுக்கே இரண்டு பாலங்கள்!

# ஆய்வில் உறுதித் தன்மை இருக்குமானால் பணியை தொடர முன்னுரிமை அளிக்கப்படும்!

### சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, பிப்.23-

காவிரியின் குறுக்கே இரண்டு பாலங்கள் அமைப்பது குறித்து ஆய்வில் உறுதித் தன்மை இருக்குமானால் பணியை தொடர அரசு முன்னுரிமை அளிக்கும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



இதுகுறித்து சட்டப் பேரவையில் ஈ.ஆர்.ஈஸ்வரன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில் வருமாறு:-

**ஈ.ஆர். ஈஸ்வரன்:** காவிரி ஆற்றின் குறுக்கே, சேலம் மாவட்டம் பூலாம்பட்டியையும், ஈரோடு மாவட்டம் நெருஞ்சிப்பேட்டையையும் இணைக்கின்ற ஒரு பாலம், சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியத்தில் கோட்டையூர் பகுதியையும், பெண்ணாகரத்தையும் இணைக்கின்ற ஒரு பாலம், காவிரி ஆற்றின் குறுக்கே இந்த இரண்டு பாலங்களும் அவசியமான பாலங்கள். அதை அமைச்சர் அவர்கள் முடித்துத் தர வேண்டும். கோட்டையூர், பெண்ணாகரம் பாலம் அமைக்கப்பட்டால், தோப்பூரிலே நடக்கின்ற விபத்துகளுக்கு ஒரு தீர்வு வரும், ஒரு மாற்றுப் பாதையாக அது இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, இந்தப் பாலங்களை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** காவிரி ஆற்றுப் பாலத்தைப் பற்றி இரண்டு இடத்திலே அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டதை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் கடிதம் கொடுத்தால், அதை ஆய்வு செய்து இந்த நிதி ஆண்டிலே சேர்த்துக் கொள்ள முடியுமா என்பது, முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னொன்று, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய அண்ணன் ஜி.கே. மணி அவர்கள் ஏற்கெனவே தொடர்ந்து இதே சட்டமன்றத்திலே அந்தக் கேள்வியை வைத்தார்கள். அதையே நீங்கள் தொடர்நது கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

ஏற்கெனவே, அதற்கு DPR தயார் செய்வதற்காக நாங்கள் சொன்னபோது, இல்லை, அது மேட்டூர் அணையினுடைய தண்ணீர் இருக்கிற இருப்பிலே அது இருக்கிறது. ஆதலால், அது pile foundation போட்டால் கூட நிற்க முடியாது என்று ஒரு DPR report கொடுத்து விட்டார்கள். ஆனாலும் அவர் விடுவதாக இல்லை. ஏனெனில், ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடம் கடிதம் கொடுத்து, அதன் மூலமாக வந்திருக்கிறது. மறுபடியும் அதற்கு முக்கியத்துவம் தந்து வேறொரு தனியார் company யை அழைத்து DPR தயார் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டை செய்திருக்கிறோம். Pile foundation போட்டு அதற்கு உறுதித் தன்மை இருக்குமேயானால் ஏனெனில் கடிதம் முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு சென்று, எங்கள் துறைக்கு வரப்பெற்றிருப்பதால் அதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதன் அடிப்படையிலே எங்கள் துறையில் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். முதல் ஆய்வில் அது முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

இரண்டாவதாக, இன்னும் திறமையானவர்களை அழைத்து அவர்களிடம் இதைக் கொடுத்திருக்கிறோம். அவை pile foundationல் போட்டால் அந்தப் பாலம் நிற்கும் என்ற நிலை ஏற்பட்டால், அந்தப் பணிகளைத் தொடரலாம். ஏனென்றால், நீங்கள் சொல்கிறீர்கள் என்பதற்காக pile foundation போடப்பட்டு, பாலத்தைக் கட்டி, அதற்குப்பின் பாதுகாப்புத் தன்மை இல்லை என்று சொன்னால், அது எந்தளவிற்கு விமர்சனத்திற்கு ஆளாகும் என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டாவதாக செய்யப்படும் DPRல் முறையாக உறுதித் தன்மை இருக்குமேயானால் அந்தப் பணிகளைத் தொடருவது குறித்து அரசு அதற்கு முன்னுரிமை அளிக்கும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. முன்னாள் செயலாளர் கே.பி.கே.தங்கவேலு அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் பாத்தம்பட்டி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள நினைவு வளைவை சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வுகளில் வழக்கறிஞர் சி.ராமநாதன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், ஒன்றியச் செயலாளர்கள் தவ.பாஞ்சாலன், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, எல்.குமார் (எ) துரைக்கண்ணு, எஸ்.எம்.சீனியார், வி.ஆர்.இளைய ராஜா ஒன்றிய பெருந்தலைவர்கள் வள்ளியம்மை தங்கமணி, மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் எம்.எம்.பாலு, த.மணிராஜன், ஆர்.வி.செல்வம், ராசி முருகானந்தம், கே.சி. சிவகுமார், ஆ.பழனிக்குமார், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், ஆ.கலைச்செல்வன், பாத்திமா பீவி, கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு தற்போது அதிக மக்கள் வரவேற்பு கிடைக்கிறது!

# நாடாளுமன்றத் தேர்தலில் இங்கு மோடியே வந்து நின்றாலும் தோற்பது உறுதி!

### புதுக்கோட்டையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி பேச்சு!

புதுக்கோட்டை, பிப். 23 -

புதுக்கோட்டை திலகர் திடலில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 46 வது நிகழ்வாக நடைபெற்ற இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்டம் வடக்கு மாவட்டம் மற்றும் நகர தி.மு.க. சார்பில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், நகர செயலாளர் ஆ. செந்தில் வரவேற்புரையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு பேசுகையில்,



அன்றைய கால கட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு கிடைத்த மக்கள் வரவேற்பு, தற்போது கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலினுக்கு கிடைத்து வருகிறது, இதனை எடப்பாடி பழனிச்சாமியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, தற்போது உதயநிதி ஸ்டாலினுக்கு அதிக வரவேற்பு கிடைக்கிறது. இன்னும் 10 ஆண்டுகள் கழித்து காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எங்கெல்லாம் அம்பேத்காருக்கு சிலை இருக்கிறதோ, அங்கெங்லாம் தந்தை பெரியாருக்கு சிலை இருக்கும், அந்த சிலையை நிறுவுபவர் உதயநிதி ஸ்டாலினாக இருப்பார் .

தமிழக முதலமைச்சராக தமிழர் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பொறுப்பேற்ற போது தமிழ்த்தாய் வாழ்த்தை உருவாக்கி நிகழ்ச்சியில் முதலில் அதனை ஒலிக்க செய்ய வேண்டும் என ஆணையிட்டு அதை வழக்கமாக கொண்டு வருகிறோம். ஆனால் ஒரு ஆளுநர் சட்டமன்றத்திற்கு உள்ளே வரும்போது விதிமுறைப் படி தேசிய கீதத்தை இசைத்து, அதன் பின்பு தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை பாடுவது மரபு. இதில் என்ன தவறு உள்ளது. ஆனால் முன்னும் பின்னும் தேசிய கீதத்தை தான் ஒலிக்கச் செய்ய வேண்டும் என ஆளுநர் கூறுகிறார். தேசிய கீதத்தின் மீது அவ்வளவு பாசம் இருந்தால் ஆளுநர் முதலில் என்ன சொன்னார் என்பதை பார்க்க வேண்டும். திராவிடம் என்ற சொல்லை இல்லை என்று கூறியவர் தான் இவர். ரவீந்திரநாத் தாகூர் எழுதிய தேசிய கீதத்தில் திராவிட உத்கல வங்கா என்று இருக்கிறது. தேசிய கீதத்தை பாடுவதாக அவர் கோபித்துக் கொண்டு செல்கிறாரே? அதில் உள்ள திராவிடம் என்ற வார்த்தை மட்டும் ஏன் அவருக்கு கசக்கிறது. அந்த தேசிய கீதத்தை பாடும் போதும் அவர் நிற்காமல் சட்டமன்றத்தை விட்டு போய்விட்டார். மொழிக்காக பலர் தீக்குளித்து மாண்டது இந்த தமிழ்நாட்டில் தான். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய தமிழ் தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று சொல்பவர்கள் எல்லாம் , அவர் இந்த சமுதாயத்திற்கு, இனத்திற்கு விரோதிகள் என்று தமிழக மக்கள் மத்தியில் எண்ணம் ஏற்படுகிறது.1965 ஆம் ஆண்டில் மொழி போராட்டம் மூலம் ஒரு எழுச்சி ஏற்பட்டது. அதைப்போல இன்றைக்கு ஆளுநரின் இந்த போக்கு அந்த நிலைக்கு மீண்டும் கொண்டு செல்லும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. திராவிட முன்னேற்ற கழகம் , உள்ளிட்ட கட்சிகள் தேசிய கீதத்திற்கு விரோதிகள் என்கிற கருத்தை விதைக்க பார்க்கிறார். அது நடக்காது. முரசொலி நில விவகாரத்தில் நான் தான் மனுதாரராக இருக்கிறேன். அந்த இடத்திற்கு ஆணையத்தின் தலைவராக இருந்த எல். முருகன் தற்போது பா.ஜ.க.வின் அமைச்சராக இருக்கிறார். அவர் இல்லாததை எல்லாம் சொல்கிறார். முருகன் இதனை விசாரிக்கும் போது தான் நாங்கள் வழக்கு போட்டோம். முருகன் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்பது தற்போது உறுதியாகி விட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் எதைச் செய்தாலும் சரியாகத்தான் செய்யும். நாங்கள் போட்ட எல்லா வழக்கிலும் நாங்கள் நிரபராதி என நிரூபித்து காட்டி இருக்கிறோம். முரசொலி சம்பந்தப்பட்ட இடம் யாருக்கு சொந்தமானது என்பது வெட்ட வெளிச்சமாக வெளியே வரப் போகிறது. நான் எம்.ஜி.ஆர். உடன் பிரச்சா ரத்திற்கு சென்ற போது கண்டதை தற்போது நமது இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கூடும் கூட்டத்தை பார்க்கிறேன். எம்.ஜி.ஆரை பார்த்து எப்படி பெண்கள் கூடுவார்களோ, அதே போல் இவரது பேச்சை கேட்பதற்காக மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் பெரும் வெள்ளம் ஏற்பட்ட இந்த நிலையிலும் நிதியை தர மறுக்கிறார்கள். மாநில உரிமைகளை பறிக்கிறார்கள். அதையும் மீறி சொந்த நிதியில் ஏராளமான மக்கள் நல திட்டங்களை நமது முதலமைச்சர் தளபதி அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் பா.ஜ.க.வினர் கொஞ்சம் வேகமாக பேசுகின்றனர், காரணம் அணையப் போகிற விளக்கு தான் பிரகாசமாக எரியும், விஜயகாந்த் சினிமாவை விட்டு வெளியே வந்து வெகுநாட்கள் ஆகிவிட்டது, ஆனால் அவருக்கு இப்போது பத்ம பூஷன் விருது கொடுத்து பா.ஜ.க. தமிழ்நாடு மக்களை ஏமாற்ற பார்க்கிறது.

ஏப்ரல் 18 அல்லது 26க்குள்ளாக நாடாளுமன்ற தேர்தல் தொடங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது, அதுவும் முதல் கட்ட தேர்தல் தமிழ்நாட்டில் தான் தொடங்க உள்ளதாக தெரிகிறது, இந்த தேர்தலில் தி.மு.க.வை ஒழித்துக்கட்ட பா.ஜ.க. முயல்கிறது, ஆனால் அது முடியாது, இந்த தேர்தலில் மோடியே வந்து தமிழ்நாட்டில் நின்றாலும் அவர் தோற்பது உறுதி. இவ்வாறு அவர் பேசினார்.

## இந்தியாவிலேயே கடந்த 3 ஆண்டுகளில்

# 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தந்தது தமிழ்நாடுதான்!

### கழக அரசின் சாதனை! பேரவையில் - அமைச்சர் சி.வெ.கணேசன் ஆதாரங்களுடன் விளக்கம்!

**சென்னை, பிப். 23 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், பேரவை விவாதத்தின் போது குறுக்கிட்டு விளக்கமளித்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், "இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையாக, தமிழ்நாட்டில் தளபதி தலைமையில் ஆட்சி அமைந்த கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நேற்று, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.பி. உதயகுமார்:** இந்த அரசினுடைய சாதனையாக இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கியதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதிலே ஒரு சின்ன clarification. உங்களுடைய தேர்தல் அறிக்கையில் மூன்று இலட்சம் பேர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு தருவதாக, ஆண்டுக்கு 10 இலட்சம் பேர்களுக்கு, 5 ஆண்டுகளுக்கு 50 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாகச் சொல்லியருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்திருப்பது 28,000 பேர்தான். மற்றது எல்லாம் கருணை அடிப்படையில், TNPSC, சீருடைப் பணியாளர்கள் எல்லாம் சேர்த்து. ஆகவே, அந்தத் தகவல் என்பது சரியான தகவலாக இல்லை. ஆகவே, ஆண்டுக்கு 10 இலட்சம் என்ற வீதம் 50 இலட்சம் பேர்களுக்கும், மூன்றரை இலட்சம் பேர்களுக்கு அரசுப் பணி வழங்குவதற்கு அரசு முன்வருமா?



**அமைச்சர் சி.வி. கணேசன்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு தரப்பிலே, TNPSC-தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகப் பணிக்குச் செல்வோர் ஒருபுறம் இருந்தாலும், தனியார் தொழில் நிறுவனங்களில் இதுவரையிலே, வருகிற 24 ஆம் தேதியன்று 2 இலட்சம் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்குகின்ற அளவிற்கு இந்த அரசு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதேபோல, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் குறித்து ஒன்றிய அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அது என்ன வென்றால், இந்தியாவிலே, இதுவரையில் தமிழ்நாட்டில் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த மாநிலம் தமிழ்நாடு என்ற செய்தியை வெளியிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள - மீனாட்சி சொக்கநாதர்

# ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இராஜகோபுரம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்!

### சட்டப்பேரவையில் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

**சென்னை, பிப். 23 -**

**"மேட்டூர் நகராட்சிப் பகுதியில் உள்ள மீனாட்சி சொக்கநாதர், ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இராஜகோபுரம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்!" என, சட்டப் பேரவையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறிப்பிட்டார்.**

இது குறித்து விவாதம் வருமாறு:-



**எஸ்.சதாசிவம்:** மேட்டூர் நகராட்சிப் பகுதியிலுள்ள மீனாட்சி சொக்கநாதர் மற்றும் ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக் கோயிலுக்கு புதிய இராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** உறுப்பினர் இராஜ கோபுரம் கோரியுள்ள திருக்கோயிலானது 30 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடத்தப்பட்ட திருக்கோயிலாகும். இந்த திருக்கோயிலுக்கு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் விமானங்கள் மற்றும் பரிவார சன்னதிகளின் திருப்பணி பாலாலயம் இன்று தொடங்கப் பட்டுள்ளது. மூன்று நிலை ராஜகோபுரம் அமைப்பதற்கு மண் பரிசோதனை செய்யும் பணி முடிவுற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து அடுத்தகட்ட பணிகளை விரைவுப்படுத்தி மூன்று நிலை ராஜகோபுரம் கட்டுகின்ற பணியை விரைவில் தொடங்கப்படும்.

**எஸ்.சதாசிவம்:** அந்த கோயிலுக்கு ராஜகோபுரம் வேண்டும் என்று கேட்டு, அதும் அது ஆய்வில் இருக்கிறது என்று சொல்லி இருக்கின்றார்கள். அந்த கோயிலில் 17 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பில் இருக்கின்றது அதை அகற்ற வேண்டும். அதேபோல் கோயில் குடமுழுக்கு செய்யும் போது அன்னதானத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். குளத்தூர் ஒன்றியம் பாலவாடியில் இருக்கும் ஜல கண்டேஸ்வரர் கோயில் 15 ஆண்டு காலம் குடமுழுக்கு செய்யாமல் இருக்கின்றது. அதற்கு குடமுழுக்கு செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கோனூர் கிராமத்தில் சென்றாய பெருமாள் கோயிலில் திருப்பணி முடிந்த நிலையில் இருக்கின்றது. எப்போது கும்பாபிஷேகம் நடைபெறும்?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு :** உறுப்பினர் கூறிய அந்த 17 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு திராவிட மாடல் ஆட்சியில் இதுவரையில் ரூ. 5,718 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்ட வரலாறு நடந்தேறி இருக்கின்றது. குடமுழுக்குகளை பொறுத்தளவில் இன்றைக்கு ஒரே நாளில் மட்டும் 32 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடந்து கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 33 மாதங்களில் 1,428 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையில் குடமுழுக்கு நடைபெற்ற ஆட்சி என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் கோரிய இராஜ கோபுரத் திருப்பணிக்கு மண் பரிசோதனை முடிந்து விட்டது. சென்றாய பெருமாள் திருக்கோயிலானது சட்டப்பிரிவு 49(i) கீழ் வருகின்ற, போதிய நிதி வசதி இல்லாத திருக்கோயிலாக இருந்தாலும், உபயதாரர் நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.சதாசிவம்:** மேச்சேரி பசுபதீஸ்வரர் கோயில், காமாட்சி அம்மன் கோயில், புக்கம்பட்டி சென்றாய பெருமாள் கோயில் ஆகிய கோயில்களில் திருப்பணிகள் தொடங்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அந்தப் பணிகளை விரைவுப் படுத்தி குடமுழுக்கு நடத்த வேண்டும் என கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு:** மேச்சேரி, பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் விருந்து மண்டபம், பக்தர்கள் தங்கும் மண்டபம், பணியாளர் குடியிருப்பு, வாகன நிறுத்துமிடம் போன்ற பணிகள் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அப்பணிகளின் ஒப்பந்தக் காலம் 18 மாதங்களாகும். எனவே, அப்பணிகள் 18 மாத காலத்திற்குள் நிச்சயம் முடித்து தரப்படும். முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையைப் பொறுத்தளவில், இன்னார் இனியவர் என்று பார்க்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளதற்கிணங்க, உறுப்பினர் அவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு பி.கே.சேகர் பாபு விவாதம் நடைபெற்றது.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

விழுப்புரம், பிப். 23 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் 27.02.2024 செவ்வாய்கிழமை அன்று மாலை 4 மணி அளவில் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1.வருகிற 01.03.2024 அன்றுதமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.

2.சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞரணி 2வதுமாநில மாநாட்டின் தீர்மானங்கள் விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்துவது சம்பந்தமாக

3.நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக

4.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை விடுத்துள்ளார்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# மரக்காணம் மேற்கு, மரக்காணம் மத்திய ஒன்றிய பிரிப்பு அறிக்கையில் திருத்தம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட ஒன்றிய பிரிப்பு அறிக்கையில்;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த கீழ்சிவிரி, டி.நல்லாளம் ஆகிய 2 ஊராட்சிகள் மரக்காணம் மத்திய ஒன்றியக் கழகத்தின் கீழும்;

மரக்காணம் மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த ஆடவல்லிகூத்தான் ஊராட்சி மரக்காணம் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் கீழும் இயங்கும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூராட்சியில் ரூ.24 லட்சம் மதிப்பிலான பல்வேறு பணிகளை பேரூராட்சி தலைவர் சூர்யதனபால் துவக்கி வைத்தார். உடன் பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி, பேரூராட்சி உறுப்பினர் ஜெயலட்சுமி வெங்கடேஸ்வரன், சரிதா சர்தார், நகர துணை செயலாளர் விண்ணரசன், ஐ.டி விங் கு.தமிழழகன், சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் முஜீப், ஒப்பந்ததாரர் குணசியா, ரகு ராமசந்திரன், நாகராஜ் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# மேகதாது அணை கட்டவிருப்பதாக கருநாடக அரசு கூறுவது சட்ட விரோதம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!



சென்னை, பிப்.23-

காவிரி மேலாண்மை ஆணையத்தில் ஒப்புதல் பெறாமலேயே மேகதாது அணையைக் கட்ட கருநாடக மாநில அரசு முடிவெடுப்பது சட்ட விரோதம். ஒன்றிய பிஜேபி அரசும் இதுபற்றிக் கருத்துக் கூறாதது ஏன் என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கருநாடக மாநில சட்டப்பேரவையில் கடந்த 12ஆம் தேதி நிதி நிலை அறிக்கை கூட்டத்தொடர் தொடங்கியது. இந்த கூட்டத்தொடரில் உரையாற்றிய முதலமைச்சர் சித்தராமையா, "தேவையான அனுமதிகளை விரைவில் பெற்று மேகதாதுவில் அணை கட்டப்படும். அங்கு அணை கட்ட அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளன. இதற்காக ஒரு தனி மண்டலக் குழுவும், இரண்டு துணை மண்டலக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. மேகதாது அணை கட்டும் போது நீருக்குள் செல்லும் நிலப்பரப்பு மற்றும் வெட்டப்பட வேண்டிய மரங்களை அடையாளப்படுத்தும் பணி நிறைவடைந்துள்ளது" என்று கூறியிருந்தார்.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக 1984இல் ரங்கநாதன் தொடுத்த வழக்கு கடந்த ஆண்டு முடிவுக்கு வந்தது. அதன் அடிப்படையில் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

**காவிரி மேலாண்மை ஆணையத்தின் ஒப்புதல் பெற வேண்டாமா?**

தமிழ்நாடு அல்லது கருநாடகா என எந்த மாநிலம் அணை காட்டுவதாக இருந்தாலும், அதற்கு காவிரி மேலாண்மை ஆணையத்தின் ஒப்புதல் தேவை. அந்த ஆணையத்தில் தென்மாநிலங்களின் உறுப்பினர்கள் உள்ளனர். 30 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு நடத்தி உச்சநீதிமன்றத்தில் நாம் பெற்ற தீர்ப்பால்தான் காவிரி நதிநீரை முறையான வகையில் பங்கிட்டுத்தர வேண்டும் என்ற நடைமுறை வந்துள்ளது. மேலும் காவிரி நதி தொடர்பில் எந்தவிதமான கட்டுமானம் செய்வதாக இருந்தாலும் நான்கு மாநிலங்களின் ஒப்புதலும் பெறப்பட வேண்டும்.

மேகதாதுவில் அணை கட்டினால், அது தமிழ் நாட்டை பாலைவனமாக மாற்றிவிடும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை அனைத்து விவசாயிகளும் பின்பற்ற வேண்டும். ஆனால் இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

காவிரி நதிநீர் 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டினால், 20 மாவட்டங்களில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படும். டெல்டா மாவட்டங்கள் விவசாயத்திற்குத் தண்ணீர் இன்றி பாலைவன மாகும்.

**சட்ட ரீதியாகப் போராடும் தமிழ்நாடு அரசு**

காவிரி நதி நீர் பங்கீடு நான்கு மாநிலங்கள் கருநாடகம், தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி தொடர்புடைய பிரச்சினையாகும்.

1974ஆம் ஆண்டு முதல் காவிரி நதிநீர் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு சட்ட ரீதியாகவும், நேரடியாகவும் போராடி வருகின்றது. காவிரி நதி நீர் நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பையும், இதன் மீதான மேல் முறையீடுகளில் உச்ச நீதிமன்றம் வழங்கிய இறுதி உத்தரவையும் மதித்து நடக்க வேண்டிய கருநாடக மாநில அரசு, பெங்களூரு நகரக் குடிநீர் கோரிக்கையை ஆயுதமாக்கி, தமிழ்நாட்டின் தண்ணீர் உரிமையை அடியோடு பறித்து விடும் திசை வழியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேகதாது அணை விவகாரத்தில் கருநாடகம் பிடிவாதம் காட்டுவது சரியல்ல!

**ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை**

இதில் கட்சி வேறுபாடு இல்லாமல் தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. இதன் மீது ஒன்றிய அரசும் தலையிட மறுத்து, தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் மேகதாது அணை தொடர்பான பிரச்சினையை நிகழ்ச்சி நிரலில் சேர்க்க வேண்டும் என்ற கருநாடகத்தின் முன் மொழிவுக்கு தமிழ்நாடு அரசு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கருநாடக முதலமைச்சரின் அறிவிப்பு மாநிலங்களிடையே நிலவும் நல்லுறவுக்கு வலுச் சேர்க்காது என்பதுடன் கூட்டாட்சி கோட்பாட்டுக்கும் எதிரானது என்பதை கருநாடக மாநில அரசும், அந்த மக்களும் உணர வேண்டும்.

உலகில் எந்தப் பாகத்திலும் மேற்புறத்தில் (upper riparian rights) உள்ள நதிகளில் அணை கட்டுவது உள்பட எந்தச் செயற்பாட்டிற்கும் கீழ்ப்புறத்தில் உள்ள அரசின், மக்களின் கருத்தினைப் பெற வேண்டும் என்பது உலக நியதி! இதனைப் புறக்கணிப்பது எந்த வகையில் நீதியும் நியாயமுமாகும்?

இவ்வளவுக்கும் கருநாடக மாநிலத்தில் தொடர்ச்சியாக தேசிய கட்சிகள் தான் ஆட்சியில் இருக்கின்றன. தேசிய நீரோட்டத்தில் நதி நீர் ஓட்டம் கலக்காதா? கலக்க வேண்டாமா?

தேவையில்லாமல் தேர்தல் கூட்டணியை இதற்குள் கொண்டு வந்து முட்டவிடக் கூடாது! அது "அரசியல்" நடத்தும் வேலைடம் ஆகும்!

மழை நீர் எல்லோருக்கும் பொது என்பதுபோல இந்தப் பிரச்சினையிலும் அணுகுமுறை மேற்கொள்வதுதான் மனிதநேயமும் உரிமையும் ஆகும்.

ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சி நமக்கு எதிரான கட்சிகள் ஆட்சியில் இருப்பதால் நன்றாக மோதிக் கொள்ளட்டும் என்று நயவஞ்சகமாகச் சிரிப்பது நயத்தக்க நாகரிகம் அல்ல என்பது மட்டுமல்ல இந்திய ஒற்றுமைக்கும் ஊறுவிளை விக்கக் கூடியதாகும். எச்சரிக்கை!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர், கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், "மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்" இன்று (23-02-2024 வெள்ளிக்கிழமை), காலை 11.30 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18.
நாள்: 21-2-2024

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---

ஆளுநர்களை வைத்து அரசியல் செய்யும் பா.ஜ.க.வை விரட்டியடிக்க

# நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணியை வெற்றி பெறச் செய்வீர்!

## திருப்பூர் தொகுதியில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பொதுக் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு வேண்டுகோள்!

திருப்பூர், பிப்.23-

முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி கடந்த பத்தாண்டு காலத்தில் பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்போது நாடகம் ஆடும் அ.தி.மு.க.வின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் திருப்பூர் நாடாளுமன்ற தொகுதி பெருந்துறை சரளையில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக்கூட்டம் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப. செல்வராசு தலைமையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலையில் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது :-

எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு ஒன்றிய அரசு தினந்தோறும் இந்த ஆட்சியை மிரட்டி வருகிறார்கள். இதனால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டமன்றத்தில் எதுவரினும் எதிர் கொள்வேன் யாருக்கும் பயப்படமாட்டேன் என கூறியுள்ளார்.

நேரு பிரதமராக இருந்தார் அவர் தான் நாட்டை கட்டமைத்தார். இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது மற்ற நாடுகளை போல் இந்தியாவிற்கு மரியாதை உண்டாக்கினார். ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது தான் தொலைதொடர்பு சாதனங்கள் இந்தியாவிற்குள் வந்தது. வாஜ்பாய் பா.ஜ.க. பிரதமராக இருந்த போது அணுகுண்டு சோதனை நடத்தி மற்ற நாடுகளை பயப்பட வைத்தார். பிரதமர் மோடியை தவிர மற்றவர்கள் அந்த பதவியை பெருமைபடுத்தியவர்கள் தான்.

**கறுப்புப்பணம் மீட்கப்பட்டதா?**

பிரதமர் மோடி மதுரையில் 2014ல் எய்ம்ஸ் மருத்துவமனை அறிவித்தார். அதன்பின் தேர்தல் சமயத்தில் 2019ம் ஆண்டு எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அத்திட்டம் தற்போது வரை அடிக்கல் நாட்டிய அளவிலேயே உள்ளது. பா.ஜ.க. அரசு ஆட்சிக்கு வந்தால் கருப்பு பணத்தை மீட்டு ரூ.15லட்சம் ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் போடுவேன் என்றார். ஆனால் போடவில்லை.

ஒவ்வொரு ஆண்டிலும் 3 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன் என்றார். அதையும் வழங்கவில்லை. விவசாயிகளின் விளை பொருட்களுக்கு தகுந்த விலை உருவாக்கி தருவேன் என்றார்.



அதையும் செய்யவில்லை. இன்றைக்கு 5 மாநில விவசாயிகள் அவர்களது விளை பொருட்களுக்கு உரிய விலை கொடுக்க கோரி போராட்டம் நடத்தி வருகிறார்கள். அதற்கு மோடி அரசு செவிசாய்க்கவில்லை. அதற்கு மாறாக போராட்டத்தை நசுக்குவதற்காக சாலைகளை உடைக்கிறார்கள். சாலைகளில் ஆணிகளை வைத்து வாகனங்களின் டயர்களை பஞ்சர் செய்கிறார்கள். ட்ரோன்கள் மூலம் வெடிகுண்டு களை வீசி வருகிறார்கள். விவசாயிகளுக்கு மட்டுமல்ல, மாநில அரசு முதலமைச்சர்களும் டெல்லிக்கு சென்று போராட்டம் நடத்தும் நிலையில் தான் இந்த ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் தர வேண்டிய பணத்தை ஒன்றிய அரசு சரியான நேரத்தில் வழங்குவது கிடையாது. தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு வழங்கவில்லை.

**மக்களோடு மக்களாக முதல்வர்!**

திமுக ஆட்சி பல்வேறு இயற்கை சோதனைகளை கடந்த ஆட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. அவைகளை சமாளித்து நமது முதல்வர் எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு மக்களுக்கு வழங்கி வருகிறார். குறிப்பாக மகளிர் உரிமை தொகை 1.15 கோடி பேருக்கும், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் உயர்கல்வி பயில மாணவிகளுக்கு ரூ.1000 வழங்கும் திட்டத்தை முதல்வர் செயல்படுத்தினார். மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் மக்களோடு மக்களாக செயல்படுகிற முதல்வராக இருந்து வருகிறார்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால் பொதுமக்களும், கட்சியினருக்கும் சிறப்பான வாய்ப்பு உள்ளது. இந்த தேர்தலில் ஒவ்வொரு வரும் முக்கியமானது. ஆங்கில பத்திரிகையில் தமிழ்நாட்டில் திமுக 39 நாடாளுமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெறும் என போட்டுள்ளது. புதுச்சேரியைச் சேர்த்து மொத்தம் 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி பெற வேண்டும்.

இது நமது தலைவரின் கரங்களைப் பலப்படுத்தக் கூடிய தேர்தல். இந்தியா கூட்டணியில் ஆட்சி அமையுமானால் நாம் பங்கேற்கும் ஆட்சியாக இருக்கும். நாடு வளர, மக்கள் வளர இந்த தேர்தலை முக்கிய தேர்தலாக கருத வேண்டும்.

ஆளுநர் பதவி என்பது மிகப்பெரிய மரியாதைக்குரிய பதவி. ஆனால் இந்தியாவில் பா.ஜ.க. ஆட்சியில் கேரளா ஆளுநர் ரோட்டில் போய் உட்காருகிறார். தமிழ்நாடு ஆளுநர் சட்டமன்றத்தில் படிக்கவே மாட்டேன் என்கிறார். மேற்கு வங்கத்தில் உள்ள ஆளுநர் தினந்தோறும் முதல்வரை வம்புக்கு இழுக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஆளுநர்கள் செயல்பட முடியாமல் செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும் என்றால் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வரவேண்டும்.

இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வர 40 நாடாளுமன்றத் தொகுதிகளையும் வென்றெடுக்கக் கூடிய பகுதியாக தமிழ்நாடு இருக்க வேண்டும். அதில் திருப்பூர் தொகுதி முதல் தொகுதியாக வரவேண்டும். தமிழ்நாட்டில் பா.ஜ.க.வினால் வெற்றி பெற முடியாது என்று அவர்களுக்கு நன்கு தெரியும். தி.மு.க.வை எளிதாக வெற்றி பெற வைத்து விடக் கூடாது என்ற எண்ணத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி மீதமுள்ள 2 ஆண்டுகள் சிறப்பாக நடக்க மத்தியில் பா.ஜ.க. அரசை வீழ்த்தும் காங்கிரஸ் தலைமையில் இந்தியா கூட்டணி உருவாக வேண்டும்.

இவ்வாறு கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு பேசினார்.

முன்னதாக நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பேராசிரியர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். மேடையில் வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

கூட்டத்தில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் க.செல்வராஜ், பெருந்துறை ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சாமி உள்ளிட்ட திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

# சேலம் தெற்கு தொகுதியில் 24 கோட்டங்களிலும் தேர்தல் ஆய்வுப் பணி!

## மாவட்டச் செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மேற்கொள்கிறார்!



சேலம், பிப்.23-

சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சேலம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட சேலம் தெற்கு தொகுதியில் உள்ள 24 கோட்டங்களிலும் பிப்.23, 24 ஆகிய 2 நாட்கள் தேர்தல் ஆய்வுப் பணி சுற்றுப்பயணம் செய்கிறார்.

23.2.2023 காலை 9.30 மணி 37வது கோட்டம் காலை. 10 மணி 38வது கோட்டம். காலை 10.30 மணி 39வது கோட்டம் காலை 11 மணி 40வது கோட்டம். காலை. 11.30 மணி 41வது கோட்டம் காலை 12 மணி 42வது கோட்டம் பகல். 3.30 மணி 43வது கோட்டம் பகல். 4 மணி 44வது கோட்டம், பகல் 4.30 மணி 45வது கோட்டம். மாலை 5 மணி 46வது கோட்டம். மாலை 5.30 மணி 47வது கோட்டம். மாலை 6 மணி 48 வது கோட்டம்.

24.2.2024. பகல். 3.30 மணி. 49வது கோட்டம் பகல் 4 மணி, 50வது கோட்டம். பகல் 4.30 மணி 51வது கோட்டம். மாலை 5 மணி. 52வது கோட்டம் மாலை 5.30 மணி. 59வது கோட்டம். மாலை 6 மணி 60வது கோட்டம்

காலை 9 30 மணி 53வது கோட்டம் காலை 10 மணி 54வது கோட்டம்

காலை 10.30 மணிக்கு55 வது கோட்டம். காலை 11 மணிக்கு 56வது கோட்டம். காலை 11.30 மணி 57வது கோட்டம்

காலை 12 மணி 58வது கோட்டம் மேற்கண்டவாறு அறிக்கையில் சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ அறிக்கையில் கூறியுள்ளார்.



உதகையில் 2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தலைமைக் கழகம் சார்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள LED திரை பொருத்திய பிரச்சார வாகனத்தை உதகையில் மாவட்டக் கழக செயலாளர் பா.மு. முபாரக் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, உதகை நகர செயலாளர் ஜார்ஜ். ஒன்றிய செயலாளர்கள் பரமசிவன். காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---

நாடாளுமன்றத் தேர்தலில்

# தி.மு.க. கூட்டணிக்கு சமத்துவ மக்கள் கழகம் ஆதரவு!

## எர்ணாவூர் நாராயணன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு!

திருவொற்றியூர், பிப்.23-

சென்னை தண்டையார்பேட்டையில் உள்ள வாணி மகாலில் சமத்துவ மக்கள் கழக செயற்குழுக் கூட்டம் கழகத்தின் நிறுவனத் தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ., எர்ணாவூர் ஏ.நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழக தொகுதி சமத்துவ மக்கள் கழக பொறுப்பாளர்கள் மாவட்டந்தோறும் நியமனம் செய்யப்பட்டனர். இக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் சூலூர் சந்திரசேகரன், இளைஞரணி செயலாளர் கார்த்திக் நாராயணன், பொருளாளர் எம்.கண்ணன் மற்றும் மாநில செயற்குழு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

நமது வேண்டுகோளை ஏற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெருந்தலைவர் அவர்களின் நினைவிடத்தின் சுற்றுப்புறத்தை தூய்மைப் படுத்தி அணையா விளக்கு மற்றும் பெருந்தலைவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி தினமாக அறிவித்தார். தற்போது புதுப்பொலிவுடன் டிஜிட்டல் முறையில் பெருந்தலைவர் அவர்களின் நினைவிடத்தையும் அவரது வாழ்க்கை வரலாற்றை புகைப்பட கண்காட்சி அமைத்து நவீனமயமாக்கிட வேண்டும் என சமத்துவ மக்கள் கழகத்தின் சார்பில் தமிழக முதல்வரை கேட்டுக் கொள்கிறோம்.

திராவிட மாடல் அரசின் காலை உணவு திட்டம், அரசு கல்லூரி பயிலும் ஏழை, எளிய மாணவிகளுக்கு மாதந் தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் புதுமை பெண் திட்டம், குடும்பத் தலைவிகளுக்கு உதவும் வகையில் மாதந் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், வீடு தேடி மருத்துவத் திட்டம் மூலம் வயதானவர்கள் அவர்களது வீட்டுக்கே வந்து மருத்துவம் பார்க்கும் திட்டம், நான் முதல்வன் திட்டம் இன்று பல லட்சம் இளைஞர்கள் பயனடைந்து வருவது, உங்களைத் தேடி உங்கள் ஊரில் என்கிற திட்டத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் ஒரு நாள் மக்களிடம் குறை கேட்டறியும் திட்டம், விடியல் பயணம் திட்டம் மூலமாக கட்டணமில்லா பேருந்து சேவையில் பெண்கள் பயனடைந்து வருவது போன்ற திட்டங்களை தமிழக முதல்வர் அவர்களுக்கு சமத்துவ மக்கள் கழகம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

சமீபத்தில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களுக்கு புதிய தொழிற்சாலைகள் அமைத்து அம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூட்டத்தின் வழியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசு அனுமதி இன்றி பனை மரங்களை வெட்டக்கூடாது என்பதற்கான அரசாணை வெளியிட வேண்டுமென தமிழக முதல்வர் அவர்களை இந்த செயற்குழு கூட்டத்தில் வேண்டு கோளாக கேட்டுக்கொள்கிறது.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக கடற்கரை ஓரங்களில் ஒரு கோடி பனை விதைகளை நட்டு உலக சாதனை புரிந்த தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவர் நாராயணன் மூலம்

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் கூட்டணி கட்சிகளுக்கும் சமத்துவ மக்கள் கழகம் தனது ஆதரவை தெரிவிப்பதுடன், நாற்பதும் 40 என்ற இலக்குடன் அதன் வெற்றியை நோக்கி பயணிக்கும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ். முருகன் பரமக்குடி, உலகநாதபுரம் ஏ. பி. ஷா மகாலில் நடைபெற்ற ராமநாதபுரம் அரசு கூடுதல் வழக்கறிஞர் கார்த்திக் சகோதரி மகன் மணிகண்டன் என்கிற விக்னேஷ்குமார் வீரசின்னம்மாள் என்கிற திவ்யதர்ஷினி திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். தி.மு.க. முன்னாள் மாவட்ட செயலாளர் சுப.த. திவாகரன், தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், மதுரை பழங்காநத்தம் பகுதி செயலாளர் சதன், கமுதி தெற்கு மாவட்ட கவுன்சிலர் பெருநாழி சசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி, மாரங்கியூர் ஊராட்சிக்கு மேம்பாலம் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், பெற்றுத்தந்த கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்களுக்கும் கிராம பொதுமக்கள் தங்களது நன்றியை தெரிவித்தனர். மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் நேற்று முன்தினம் (21.02.2024) சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கும் பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். இந்நிகழ்வின் போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் எஸ். நாகராஜன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திருமதி. எம்.லக்ஷ்மி, மற்றும் அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தென் மாநிலங்களுக்கு வருவாயில் நியாயமான பங்கைக் கொடுங்கள்!

## மாநிலங்களவையில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 23-

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேசியதாவது:-

தென் மாநில தலைவர்கள், நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்று சில காலமாகவே குற்றம் சாட்டி வருகின்றனர். GST எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப் படுத்தப்பட்டு, 15 ஆம் நிதி ஆணைய அளவுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வரிப் பகிர்வுக் கொள்கை மாற்றம் கண்டது இந்த சிக்கலின் மூலக் காரணம். வரி விநியோகம் ஆராயப்படுவதற்கு முன், கொள்கை முடிவுகள் எவ்வாறு கூட்டாட்சிக் கட்டமைப்பில் மாநிலங்களின் நிதி சுயமேலாண்மையினை குலைத்து விட்டன என்பதை புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம்.

GSTக்கு முன்னர், மதிப்புக் கூட்டு வரி விகிதத்தை, தங்கள் நிதித் தேவைக்கு ஏற்ப முடிவு செய்வதில், மாநிலங்கள் தன்னாட்சி பெற்றிருந்தன. GST, மாநிலங்கள் ஒன்றிய அரசை சார்ந்து இருக்குமாறு, நிதிப் பகிர்வை எதிர்நோக்கி இருக்க தள்ளப்பட்டன. GST அறிமுகம் செய்யப்பட்டபோது, 14 விழுக்காடு வரி வருவாய் அதிகரிக்கும் என்றும், இடைக்காலத்தில் ஏற்படும் இழப்புகள் ஈடு செய்யப்படும் என்றும் ஒன்றிய அரசு உறுதியளித்தது. தென் மாநிலங்கள் அதிக வரி ஈட்டுவதால், உருவாக்கப்பட்ட GST இழப்பீடு செஸ் மூலம், அவை அதிக இழப்பீடு பெற்றிருக்க வேண்டும்.

### ஜி.எஸ்.டி.இழப்பீடு மாநிலங்களுக்கு நிறுத்தம்!

ஆனால், சென்ற ஆண்டு மாநிலங்களுக்கு GST இழப்பீடு வழங்குவது நிறுத்தப்பட்டது. இழப்பீடு வழங்கிடும் நோக்கில் உருவாக்கப்பட்ட GST இழப்பீட்டு செஸ், இப்போதும் ஒன்றிய அரசால் வசூலிக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், ஆண்டுதோறும் 20,000 கோடிகளுக்கும் மேல் இழப்புகளை எதிர்கொண்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பை வரிப்பகிர்வைத் தீர்மானிக்க, 15 ஆம் நிதி ஆணையம் பயன்படுத்தி தீவிரமாகப் பங்கிட்டது, நிலையினை மிக மோசமாக்கியது. முந்தைய ஆணையம் பின்பற்றிய 1971, 2011 ஆகிய இரு ஆண்டுகளின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பையும் கருத்தில் கொண்ட முறை, நற்பலன் அளிக்கும் விளைவுகளை தரும் மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொண்ட மாநிலங்களுக்கு வெகுமானம் வழங்கிடும் வகையில் இருந்தது. இதிலிருந்து மாறுபட்டு 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மட்டும் நிதி பகிர்வு அளிப்பது, உத்திர பிரதேசம் போன்ற அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலங்கள் கணிசமான அளவு அதிக பங்கினை பெற்று, குறைந்த மக்கள்தொகை கொண்ட தென் மாநிலங்கள் பாதிப்படைகின்றன. பகிர்ந்தளிக்கப்பட்ட வரியில் உத்திர பிரதேசம் 18 விழுக்காடு



பெற்ற நிலையில், தமிழ்நாடு 4.2 %, கர்நாடகம் 3.65%, தெலுங்கானா 2.13%, ஆந்திர பிரதேசம் 4.11%, கேரளம் 1.96% மட்டுமே பெற்றன.

### மாநிலங்களுக்கு ஒதுக்கிய நிதியின் விபரங்கள் எங்கே?

இந்த ஏற்றத்தாழ்வினை உரக்க விமர்சிக்கும், தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு கேள்வி எழுப்பி, தென் மாநிலங்களுக்கு நியாயம் கேட்கிறார். இந்தக் கருத்துகளின் அடிப்படையிலேயே, நான் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பினேன். கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலங்கள் ஒன்றிய அரசிற்கு செலுத்திய GST, நேரடி, மறைமுக வரி, மத்திய வரியில் இருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்த நிதி ஆகியவற்றின் விரிவான தரவுகளைக் கேட்டேன்.

எனது கேள்வி எண் 362க்கு ஒன்றிய நிதி அமைச்சகம் பிப்ரவரி 6 ஆம் தேதி அளித்த பதிலில் வெளிப்பட்டது அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திர பிரதேசம், தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் சேர்ந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் GST, GST அல்லாத நேரடி வரி என்று 22.26 இலட்சம் கோடி ரூபாய்கள் பங்களித்துள்ளன, ஆனால் வெறும் 6.42 இலட்சம் கோடி ரூபாய்கள் மட்டுமே அவற்றின் பங்காக அளிக்கப்பட்டது. இதே காலத்தில், நேர் மாறாக உத்திரப் பிரதேசம் வெறும் 3.41 இலட்சம் கோடிகள் மட்டுமே பங்களித்து, ஆச்சரிய மூட்டும் 6.91 இலட்சம் கோடிகள் ஒதுக்கீடு பெற்றது.

### மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஏற்றத் தாழ்வு!

ஏற்றத்தாழ்வுகள் பற்றிய கருத்துகளை களைந்திட ஒத்துக்கீட்டு வழிமுறையினை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்ததா என்ற எனது கேள்விக்கு பதில் இல்லை. இது, உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நேரடியாகவும் முழுமையாகவும் பதில் தரப்பட வேண்டும் எனும் மக்களவை விதிகளில் உள்ள நிபந்தனைக்கு முரணானதாகும்.

மத்திய வரியினை மாநிலங்களுக்கு வழங்கியதை ஆய்வு செய்தால், 2018-19, 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கிடையே GST, நேரடி வரி என செலுத்தப்பட்ட ஒவ்வொரு ரூபாய்க்கும் சராசரியாக தமிழ்நாடு வெறும் 26 காசுகள் மட்டுமே பெற்றிருக்கின்றது. கர்நாடகம் 26 காசுகள், கேரளம் 62 காசுகள், ஆந்திர பிரதேசம் 50 காசுகள், தெலுங்கானா 40 காசுகள் பெற்றிருக்கின்றன. உண்மையில் 2018-19, 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கிடையே தமிழ்நாட்டின் பங்கு 27 காசுகளில் இருந்து 24 காசுகளாக சரிந்துள்ளது. கர்நாடகம் 22 இலிருந்து 12, தெலுங்கானா 60 இலிருந்து 31, கேரளம் 81 இலிருந்து 50, ஆந்திர பிரதேசம் 66 இலிருந்து 49 காசுகள் என்று சரிந்துள்ளன.

### வட மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்குவது ஏன்?

மாறாக, உத்திரப் பிரதேசம் ஒன்றிய அரசிற்கு செலுத்திய ஒவ்வொரு ரூபாய்க்கும், 2.02 ரூபாய்கள் பெற்றுள்ளது. மத்தியப் பிரதேசம் 1.70 ரூபாய்களும், இராஜஸ்தான் 1.14 ரூபாய்களும் பெற்றுள்ளன. இது தென் மாநிலங்களுக்கும், சில வட மாநிலங்களுக்கும் இடையேயான ஏற்றத்தாழ்வினை தெளிவாக்குகிறது.

இந்தத் தென் மாநிலங்கள், தாங்கள் செலுத்திய தொகையில் ஏறக்குறைய 25% மட்டுமே திரும்பப் பெறும் நிலையில், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் 200% பெறுகின்றன. நான் உத்திர பிரதேசத்திற்கோ, வேறு வட மாநிலத்திற்கோ அதிக நிதி பங்கீடு அளிக்க வேண்டாம் என்று வலியுறுத்தவில்லை, எனது கவலை, தென் மாநிலங்களுக்கு மிகக் குறைந்த ஒதுக்கீடு செய்யப்படுவதே - அவர்கள் மீது ஏன் இந்த வஞ்சனை.

### தென் மாநிலங்கள் ஏன் தண்டிக்கப்படுகின்றன?

மக்கள்தொகைப் பெருக்கத் தடுப்பு உள்ளிட்ட நல்ல கொள்கைகளை செயல்படுத்திய தென் மாநிலங்கள் ஏன் தண்டிக்கப் படுகின்றன? தென் மாநில தலைவர்கள் கோருவது போல, அவை நியாயமான பங்கினைப் பெறும் வகையில், நிதி ஒதுக்கீடு வழிமுறைகளை மறுபரிசீலனை செய்திட இதுவே சரியான நேரம்.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. வலியுறுத்தினார்.


## திருப்பத்தூர் மாவட்டம்

# ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் திருத்தம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திருப்பத்தூர் மாவட்டத்தில் 06.09.2021 அன்று பிரித்து "முரசொலி"யில் வெளியிடப்பட்ட ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய 3 ஒன்றியங்களில், பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஜோலார்பேட்டை கிழக்கு, ஜோலார்பேட்டை மேற்கு, ஜோலார்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம்** : 1.செட்டியப்பனூர், 2.நெக்குத்தி, 3.பெத்தகல்லுப்பள்ளி, 4.சின்னவேப்பம்பட்டு, 5.சின்னகல்லுப்பள்ளி, 6.சின்னமோட்டூர், 7.கலந்திரா, 8.பெரியமோட்டூர், 9.மண்டலவாடி, 10.கேத்தாண்டப்பட்டி, 11.கூத்தாண்டு குப்பம், 12.காவேரிப்பட்டு, 13.சின்னகம்மியம்பட்டு, 14.பெரியகம்மியம்பட்டு, 15.பொன்னேரி, 16.ரெட்டியூர் ஆகிய 16 ஊராட்சிகள்.

**ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம்**: 1.வேட்டப்பட்டு, 2.சோமநாயக்கன்பட்டி, 3.புள்ளானேரி, 4.திரியாலம், 5.அம்மணாங்கோயில், 6.அக்ராகரம், 7.கல்நார்சாம் பட்டி, 8.சந்திரபுரம், 9.மல்லப்பள்ளி, 10.பணியாண்டபள்ளி, 11.வெலக்கல்நத்தம் ஆகிய 11 ஊராட்சிகள்.

**ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம்**: 1.ஏலகிரிமலை, 2.ஏலகிரி கிராமம், 3.அம்மையப்ப நகர், 4.கட்டேரி, 5.தாமலேரிமுத்தூர், 6.சின்னமூக்கனூர், 7.மூக்கனூர், 8.ஒட்டப்பட்டி, 9.புத்தகரம், 10.கோணாப்பட்டு, 11.பாச்சல் ஆகிய 11 ஊராட்சிகள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.2.2024

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.


## முதல்வர்-தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## டி.பி.எம்.மைதீன்கான்-சு.சுப்பிரமணியன்-ஹெலன் டேவிட்சன் - வசந்தம் ஜெயக்குமார் - ஞானதிரவியம் - அப்துல் வகாப்- சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

நெல்லை,பிப்.23-

முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 25.2.2024 (ஞாயிறு) அன்று மாலை 5 மணி அளவில் நெல்லை டவுண் குளப்பிறை தெருவில் நெல்லை மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன்,மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் மாவட்ட விவசாயி அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன், மாநகர துணை செயலாளர் அப்துல் கையும், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)அன்டன் செல்லத்துரை(பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப்மீரான் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் ஞானதிரவியம் எம்.பி. மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன் மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன்,மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த் மாநில வர்த்தக அணி இணை செயலாளர்

மாலைராஜா,மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ்,மாவட்ட கழக நிர்வாகிகள் சுரேஷ்,தர்மன், வண்ணை சேகர், நடராஜன், ராஜேஸ்வரி, ஆ.க. மணி, கிரிஜாகுமார், மாநகர கழக நிர்வாகிகள் அண்ணா துரை,பாலமுருகன் என்ற பிரபு சுதாமூர்த்தி,ஒன்றிய கழக செயலாளர்கள் மாரியப்பன்,அருள்மணி, அன்பழகன்,பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி உள்பட மேலப்பாளையம், பாளை, பகுதி கழக நிர்வாகிகள், மண்டல தலைவர்கள், கழகப் பேச்சாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாநகரப் பிரதிநிதிகள்,

அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்,நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவில் 27வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் நன்றியுரையாற்றுகிறார்.

## 2024 - நாடாளுமன்றத் தேர்தல் காணொலி வாகன பிரச்சாரம்

# உதகையில் மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் துவக்கி வைத்தார்!

உதகை, பிப்.23-

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, தலைமைக் கழகம் சார்பில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் LED திரை பொருத்திய கழக அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு தெரிவித்திடும் பிரச்சார வாகனம் அனுப்பிய வைக்கப்பட்டுள்ளது.

இதனை உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உதகை நகர பகுதியில் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி உதகை ஏ.டி.சி., திடல் அருகில் உதகை நகர செயலாளர் ஜார்ஜ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட திமுக செயலாளர் பா. மு.முபாரக் பிரச்சார நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன், உதகை வடக்கு ஒன்றிய செயலாளர் காமராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் தொரை, பில்லன், மோகன்குமார், சதக்கத்துல்லா, உதகை நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, ரஹமத்துல்லா, நகர அவை தலைவர் கோபி, நகர துணை செயலாளர்கள் ரீட்டா மேரி, கார்டன் கிருஷ்ணன், நகர பொருளாளர் அணில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் கார்தி///க், தம்பி இஸ்மாயில், வெங்கடேஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் நாகராஜ், ரமேஷ், கீதா, மேத்யூஸ், ரகுபதி, கஜேந்திரன், மார்கெட் ரவி, சசிகுமார், வஹாப், தியாகு, ஆட்டோ பாபு, வெங்கடேஷ், செல்வராஜ், கோபால், தருமன், குண்டன், காளி, உதகை நகர மன்ற உறுப்பினர்கள் விஷ்னு, பிரியா, மேரி பிளோரீனா, கிளை செயலாளர்கள் நிர்வாகிகள், ரவி, பாரதிராஜா, சங்கர் உட்பட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## பெரம்பலூரில் ரூ.366 கோடி மதிப்பீட்டில்

# கூட்டுக்குடிநீர் திட்டம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி!

## குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் இனிப்புகள் வழங்கினர்!

பெரம்பலூர்,பிப்.23-

பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.366 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், பெரம்பலூர் மாவட்ட பொதுமக்கள் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். பழைய பேருந்து நிலையத்தில் உள்ள காமராஜர் வளைவு, புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்றஇந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ)அப்துல் பாரூக், தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் தலைவர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை எஸ். நடராசன்

### பிப்ரவரி 23 (1984)



சோழ மண்டலத்தின் தலைநகராம் தஞ்சையில் கழகம் வளர்த்த தீரர். அய்யா – அண்ணா நெறிகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு உழைத்த சுயமரியாதைச் சுடர். சோதனைக் காலங்களிலும் கலைஞர் தலைமையில் ஏறுநடை போட்ட தோழர்.

தஞ்சை நகரச் செயலாளராக தொடர்ந்து 25 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். தமிழக சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தஞ்சை நகராட்சி உறுப்பினர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

மிசா கொடுமையையும் தாங்கியவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"சிதம்பரத்து நடராசர் நடனமாடுவதற்காக ஒற்றைக் காலில் நிற்கிறார். இவரும்தான் கொண்ட கொள்கையில் – எடுத்த காரியத்தை முடிப்பதில் ஒற்றைக் காலில் நிற்கக் கூடியவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழாரம் சூட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் சந்தித்து, மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிக்காக தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் சாலை போக்குவரத்து நிறுவனத்தின் பணியாளர்களின் ஒரு நாள் ஊதியத் தொகையான மொத்தம் 14 கோடியே 23 இலட்சத்து 92 ஆயிரத்து 784 ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2023–24ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் இடைக் கால பங்கு ஈவுத் தொகையான 7 கோடியே 60 இலட்சம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் தலைவர்/ மேலாண்மை இயக்குநர் திருமதி கருணா பிரியா ஆகியோர் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டும்!

# சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.5 கோடியாக உயர்த்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – கழக உறுப்பினர் க.சுந்தர் கோரிக்கை!

**சென்னை, பிப். 23 – சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உத்திரமேரூர் தொகுதி கழக உறுப்பினர் க.சுந்தர், முத்தமிழறிஞர் கலைஞருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டும்" என ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.**

**மேலும் அவர் பேசுகையில்,. ''சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.5 கோடியாக உயர்த்தி அறிவித்திடுவீர் '' என வேண்டுகோள் விடுத்தார்.**



சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது :-

எங்களுடைய ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், என்னை பேச அழைத்த தங்களுக்கும் நான், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர் நலன், விளையாட்டுத் திறன் எனச் செயல்படும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உள்ளிட்ட இந்த அவையிலே இருக்கின்ற அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட்டைத் தாக்கல் செய்வதற்கு முன்னதாக, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கிறையென்று வைக்கப்படும்"

என்று அழகான திருக்குறளை அற்புதமாக வாசித்தார். ஆக, சபை நடவடிக்கைகளை அவர் தொடங்கிய பிறகு, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், 126 நிமிடங்கள் அவருடைய நிதிநிலை அறிக்கையை முழுவதுமாகக் கேட்டபோதுதான், அந்தக் குறள் எப்படி நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பொருந்துகிறது என்று எண்ணி, நாங்களெல்லாம் வியந்து போனோம்.

பெருமைமிகு கலைஞர் நூற்றாண்டில் வியப்பிற்குரிய திராவிட மாடல் ஆட்சியில் நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்திலே கடந்த செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதியில் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை தொடங்கிவைக்க வருகை தந்த எங்களுடைய முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, அதை விரிவுபடுத்துகின்ற வகையிலே, ஒரு கோடியே 15 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.13,720 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். இன்னும், கேளுங்கள் தரப்படும், விடுபட்டுப்போன அந்த மகளிருக்கும் வழங்குவதற்கு நம்முடைய அரசு தயாராக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நிதியமைச்சர் அவர்கள் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கை பேரறிஞர் அண்ணாவின் அறிவுரைகளைத் தாங்கியதோடு, முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சமூக நீதி, கடைக்கோடித் தமிழர் நலன், உலகை வெல்லும் இளைய தமிழகம், அறிவுசார் பொருளாதாரம், மகளிர் நலன் காக்கும் சமத்துவப் பாதை, பசுமை வழிப் பயணம், தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும் என்ற ஏழு இலக்குகளுடன் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றில் நான் ஒன்றைமட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே 25 ஆண்டுகளுக்கு முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலே 1999, பிப்ரவரி 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தமிழ் இணையம்-99 மாநாட்டைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அன்றைக்கு 4-வது முறையாக முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ் மொழியில்-மென்பொருள் வளர்ச்சி, வளர்ச்சி இல்லாத சூழலிலும், மென்பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் நல்ல முறையில் ஏற்படாததை மாற்றிட நினைத்தார். அதற்காகத்தான் 'தமிழ் இணையம்' அன்றைக்கு அவருடைய தலைமையில் நடத்தப்பட்டது. உலகளவிலே இருந்த அறிஞர்களை வைத்து அன்றைக்கு தமிழ் விசைப்பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டது. அந்த மாநாட்டினுடைய அடுத்தடுத்த கட்டமாகத்தான் 2008 ஆம் ஆண்டில் 5-வது முறையாக முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், மாநில தரவு மையத்தையும், தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களை இணைக்கும் பெரும் பரப்பு வலை அமைப்புத் திட்டத்தையும், அரசு மேல்நிலைப் பள்ளிகளிலே கணினிக் கல்வியும் தொடங்கி, நிர்வாக நேர்த்திக்கும் தமிழ்நாட்டு இளைஞர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் கால்கோல் நடத்தி வைத்தார் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அதன் தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 6-வது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தை அரியணையில் அமர்த்தி, பன்னாட்டு கணித்தமிழ்-2024 என்கிற ஒரு அற்புதமான நிகழ்வை கடந்த 15 நாட்களுக்கு முன்பு சென்னையில் நடத்திக் காட்டினார்கள். அதன் மூலமாக *Natural Language Processing tools, Artificial Intelligence, Machine learning, Machine translation, Sentiment Analysis, Large Language models, Automatic Speech Recognition* போன்ற உயர் தொழில் நுட்பங்களை தாய்மொழி தமிழிலே கொண்டு வருவதற்கான வழிவகைகளை, பன்னாட்டு கணித்தமிழ்-2024 என்ற மாநாட்டில் விதைகளாக ஊன்றியிருக்கின்றார்கள்.

இவையெல்லாம் செயல் வடிவம் பெறுவதற்காகத்தான் நிதிநிலை அறிக்கையில் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் செயல் வடிவம் பெறுகின்றபோது, 50 ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் அவர்கள் போட்ட விதை, தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் பல்வேறு சாதனைகளை—ஏன் என்று சொன்னால் நிகழ்காலம், எதிர்காலத்தை கலந்து பார்க்கின்றபோது, உலகளவிலே இன்றைக்கு செயற்கை நுண்ணறிவு பரவத் தொடங்கியிருக்கிறது. இன்னும் எதிர்காலத்தில் எந்த அளவிற்கு நிலைமை இருக்கும் என்று சொன்னாலும்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்த முன்னெடுப்பின் காரணமாக மிகச்சிறப்பான முறையிலே தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்திலே, பல்முனை வளர்ச்சியிலே தமிழை தகவமைக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

'ஏழைகள் இருக்கும் வரை இலவசங்கள் இருக்கும்' என்று முழக்கமிட்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் ஆட்சி இருக்கும்வரை, மக்கள் நலத் திட்டங்கள் தொடரும் என்று சவாலாக சொல்லியிருக்கின்றார். நெருக்கடிகளைக் கடந்து சாதனைகளைப் புரிந்து வருகின்றார். நம்முடைய நிதிநிலை அறிக்கையில், எதிர்பாராத நெருக்கடிகள், ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை இவற்றையெல்லாம் கடந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சாதனைகளைச் செய்து வருகிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில், எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் செல்லூர் கே. ராஜூ நிதிநிலை அறிக்கையில் ஒன்றுமே இல்லை என்று கூறினார். பக்கத்திற்குப் பக்கம் நல்முத்துக்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கரும்பை நீங்கள் எந்தப் பக்கம் கடித்தாலும் இனிக்கும். நீங்கள் நிதிநிலை அறிக்கையை சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். இது அற்புதமான ஒரு நிதிநிலை அறிக்கை. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு பல திட்டங்கள், 'நான் முதல்வன்' 'புதுமைப் பெண்' இவ்வாறு திட்டங்களை சொல்லிக்கொண்டே போகலாம். அந்தத் திட்டங்களைத் தொடர்ந்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே, 'தமிழ்ப் புதல்வன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற ஒரு அற்புதமான திட்டம். அதாவது, பெண் மாணவிகளுக்கு உயர் கல்வியிலே மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்குகின்ற இந்தத் திட்டம், எங்களுக்கெல்லாம் இல்லையா! என்று ஏக்கப் பெருமூச்சுவிட்ட அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு 12 மாதங்களும் 3 இலட்சம் மாணவர்களுக்கு 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இப்போதுதானே பேசுவதற்கு ஆரம்பித்தேன் (சிரிப்பு). இதில் நான் இன்னும் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், எல்லாவற்றையும் சொல்ல முடியாது. 2010 ஆம் ஆண்டில் திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'கலைஞர் வீட்டு வசதித் திட்டம்' என்ற திட்டத்தினை ஆரம்பித்தார்கள். ஆனால், அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றத்தினால், 'குடிசைகள் இல்லாமல் தமிழ்நாடு' என்கிற அவருடைய கனவு நிறைவேறாமல் போய்விட்டது. தற்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டில் 1 இலட்சம் வீடுகளுக்கு 3,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 3,50,000 மதிப்புள்ள வீடுகள். இந்தத் திட்டம், எனக்கு எவ்வாறு நினைவுக்கு வருகிறதென்றால், நம்முடைய பெரியார் அவர்கள், அவருடைய நெஞ்சிலே தைத்த முள் .

தந்தை பெரியாரின் எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்பதை சட்டமாக போட்டபோது, அது நீதிமன்றத்திற்கு சென்றது. கடைசியில் நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆக, தந்தை பெரியார் அவர்களுடைய நெஞ்சில் தைத்த முள்ளையும், தன்னுடைய கனவுத் திட்டம் நிறைவேறாமல் போய்விட்டதே என்ற எண்ணத்தில் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நெஞ்சில் தைத்த முள்ளையும் அகற்றிய பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களை சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்யாட் போட்டியை அருமையாக நடத்தி நல்ல பெயர் பெற்றார்கள். 6-வது கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை நடத்தினார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெறுகின்ற வகையில் 98 பதக்கங்களைப் பெற்றது என்பதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதி கோரிக்கைகள் பற்றி சொல்லி விடுகிறேன். உத்தரமேரூரிலுள்ள காவல் நிலையக் கட்டடம் 100 ஆண்டுகளைக் கடந்து, பழுதடைந்த நிலையில், அது சில மாதங்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட நீதிமன்றத்திற்கு—அதற்கு ஏற்கெனவே கட்டடம் கட்டுவதற்கான கோப்பு எங்கேயோ நிலுவையில் இருக்கிறது. அதையும் சரி செய்ய வேண்டும். வாலாஜாபாத் தாலுகா தலைமையிடம், அதற்கு உரிமையியல் நீதிமன்றம், தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும். களியபேட்டை பகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்துத் தர வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நான் 35 ஆண்டுகாலமாக இந்தக் கோரிக்கையை வைத்து வருகிறேன் என்பது இங்குள்ள மாமன்ற உறுப்பினர்கள் பல பேருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டில் 73 ஊராட்சிகளைக் கொண்ட மிகப்பெரிய ஒன்றியமாக உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியம் விளங்குகிறது. அதை எல்லோருடைய கனவையும் நிறைவேற்றுகின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த எளியவனுடைய கனவையும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்கள், வேளாண்மை பட்ஜெட்டில் எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையும் பாராட்டுவதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்றும், அவர் பிறந்த ஜூன் 3 ஆம் தேதியை செம்மொழி தமிழ் தினமாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியை 25 இலட்சம் ரூபாய் என ஆரம்பித்து வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். தற்போது எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய தொகுதிகளுக்கு தைரியமாக செல்கிறார்கள் என்றால், அதற்கு அடித்தளமிட்டவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 5 கோடி ரூபாயாக உயர்த்தி, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கனவுகளை நிறைவேற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டு, இந்த சிறப்பான பட்ஜெட்டை வரவேற்று அமைகிறேன்.

இவ்வாறு க.சுந்தர் எம்.எல்.ஏ. பேசினார்.



சென்னை, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகத்தில், நேற்று முன்தினம் (21.02.2024) முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் தொடர் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ள பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்நிகழ்வின்போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் எஸ்.நாகராஜன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திருமதி எம். லக்ஷ்மி, ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் திருமதி பி. ஸ்ரீ வெங்கட பிரியா, பள்ளி கல்வி துறை இயக்குநர் முனைவர் ஜி. அறிவொளி மற்றும் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் தலைவர் சி. சிங்கார வேலன், இணைச் செயலாளர் எஸ்.ரூபன்முத்து, முனைவர். அரங்கராஜா, முனைவர். சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில்

# நெல்லை மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை, பிப். 23 - முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி மாநகர பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 25.02.2024, 26.02.2024 ஆகிய 2 நாட்கள் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெறுகிறது என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது அறிக்கை விவரம் வருமாறு.

நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை, நெல்லை டவுன், தச்சநல்லூர், மேலப்பாளையம் ஆகிய 4 பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) அன்டன் செல்லத்துரை (பாளை) நமச்சிவாயம் (நெல்லை) துபாய்சாகுல் (மேலப்பாளையம்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அதன்படி 25.02.2024 (ஞாயிறு) காலை 10 மணிக்கு பாளையங்கோட்டை பகுதிக்கு மாஷா மகால் மேலரதவீதி பாளையங்கோட்டை. காலை 11 மணிக்கு நெல்லை பகுதிக்கு மாநகர கழக அலுவலகம் டவுன்.

26.02.2024 (திங்கள்) மாலை 6 மணி தச்சநல்லூர் பகுதிக்கு சியாமளா கார் பார்க்கிங் பி.வி.டி.தியேட்டர் அருகில் நெல்லை சந்திப்பு.இரவு 7 மணி மேலப்பாளையம் பகுதிக்கு என். எஸ்.கே. திருமண மண்டபம் மேலப்பாளையம்.

ஆகவே அந்தந்த பகுதிக்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள்,வட்டக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மீனவர்அணி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட

# துணை அமைப்பாளர் நியமனம்!

### மீனவர் அணிச் செயலாளர் டாக்டர்ஏ.ஜோசப் ஸ்டாலின்அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சே.ஜார்ஜ் மறைவெய்திய காரணத்தால், **அ.மைக்கேல்ராஜ்.** (12/107/1, பரவர்தெரு, தெங்கம்புதூர், கன்னியாகுமரி மாவட்டம் - 629 602.) கன்னியாகுமரிகிழக்குமாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டமாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 22.2.2024

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. மீனவர் அணி




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024" –ஐ வெளியிட்டார்கள். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி, ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.2.2024) தலைமைச் செயலகத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் சிந்தனைச்செல்வன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ். பாலாஜி, ஜெ. முகம்மது ஷா நவாஸ், எம். பாபு, சமூக செயற்பாட்டாளர் ரமேஷ் பாபு ஆகியோர் சந்தித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கான நிதி செலவிடப்படுவதை உறுதி செய்வதற்கும், அவர்களுக்கான மேம்பாட்டுச் செயல் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டம் இயற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில்

# "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024"

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, பிப்.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024"ஐ வெளியிட்டார்.

சமூகத்தில் பெண்களின் வளர்ச்சியைக் கொண்டே அச்சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மதிப்பிட இயலும். இதன்பொருட்டு, பாலின வேறு பாட்டினைக் களைந்திடவும், பெண்களுக்கேற்ற பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்திடவும், பெண்களின் நிலையினை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை சீரிய முறையில் செயல்படுத்தி, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக திகழச் செய்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், சமூக நீதி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றின் அடிப்படையில் இம்மாநில மகளிர் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கொள்கையானது, 10 ஆண்டுகளுக்கு அல்லது அடுத்த புதிய கொள்கை உருவாக்கப்படும் வரை நடைமுறையில் இருக்கும். மேலும், இக்கொள்கையினை ஐந்தாண்டுகளுக்கு பிறகு மறுஆய்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் மகளிர் மேம்பாட்டிற்கென தனியான ஒரு கொள்கையை வெகுசில மாநிலங்களே இதுவரை வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

*மாநில மகளிர் கொள்கையின் முக்கிய சிறப்பம்சங்கள் குறிக்கோள்கள்:*

பாலின உணர்திறன் கொண்ட கல்விமுறையை நிறுவுதல் மற்றும் பெண்குழந்தைகளின் இடை நிற்றல் விகிதத்தைக் குறைத்தல்.

வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.

வேலைவாய்ப்புகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல்.

அனைத்து அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத பணிகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் அவர்களுக்கு உகந்த பணியிடங்களை உறுதி செய்தல்.

பெண்கள் நிர்வகிக்கும் சிறு தொழில்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.

பெண்கள் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்து டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல்.

தொழில் துறையில், பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டை வழங்குவதன் மூலம் மகளிரிடையே நிலவும் திறன் இடைவெளியைக் குறைத்தல்.

நிறுவனக் கடன் வசதிகளை அணுகுதல் மற்றும் தேவைப்படும் மகளிருக்கு வங்கி கடனுதவி அதிகம் கிடைப்பதற்கு வழிவகை செய்தல்.

மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல்.

*செயல்படுத்துதல்*

அரசில் உள்ள பல்வேறு துறைகள் மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்பின் மூலம் முன்முயற்சிகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இந்த கொள்கையின் நோக்கத்தினை அடைய வழிவகை செய்யப்படும். இக்கொள்கையில் இணைந்துள்ள பல்வேறு துறைகள், தங்கள் திட்டங்களை கொள்கையின் நோக்கங்களுடன் இணைந்து உருவாக்க வேண்டும்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையானது ஒருங்கிணைக்கும் துறையாக இக்கொள்கை செயல்படுத்துதலை கண்காணிக்கும். சமூக நலத்துறை இயக்குநரக அலுவலகத்தில் 'செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு அலகு' அமைக்கப்படும்.

*கண்காணித்தல்*

தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட அளவிலான பெண்கள் உரிமைக் குழு, தொடர்புடைய பிற துறைகளுடன் இணைந்து ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கையை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்து இடைக்கால திருத்தங்களை பரிந்துரைக்க வேண்டும். இதேபோன்று, மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கொள்கையின் செயலாக்கத்தை கண்காணித்து, எதிர்கொள்ளப்படும் சவால்களை சரிசெய்ய வேண்டும்.

இக்கொள்கை, சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் அதிகாரப் பகிர்வை பற்றி எடுத்துரைப்பதுடன், கல்வி, வேலைவாய்ப்பு, திறன் வளர்ப்பு ஆகியவற்றில் மகளிரின் நிலையை மேம்படுத்துவதுடன், மகளிர் தங்களுக்குள் புதைந்துள்ள, இதுவரை கண்டறியாத சக்திகளை வெளிக்கொணர்ந்து பெண்கள் சுயமரியாதை யுடன் வாழ்ந்திடவும், அவர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான, இலட்சியம் நிறைந்த சூழலை உருவாக்க ஏதுவாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலத் துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டம் - மேல்சேவூர் அருகே விபத்தில்

# உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

விழுப்புரம், பிப். 23-

விழுப்புரம் மாவட்டம், மேல்சேவூர் அருகே அரசு பேருந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்சேவூர்(ம) அம்மன் குளத்துமேடு கிராமத்தில் நேற்று (21.2.2024) மாலை TN32N3938 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து சாலை வளைவைக் கடக்க முயன்றபோது எதிர்பாராதவிதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணம் செய்த அம்மன் குளத்துமேடு கிராமத்தைச் சேர்ந்த செல்வன் பிரவீன் குமார் (வயது 16) த/பெ. அன்பழகன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விழுப்புரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வன் வீனேஷ் (வயது 16) த/பெ. ஜெயராஜு என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கும் அவருடைய உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மதுரை வண்டியூர் கண்மாய் பகுதிகளில் - பாலம் கட்டுகிற பணிகளில் முன்னுரிமை!

## சட்டப்பேரவையில் - பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!



சென்னை, பிப்.23-

"மதுரை வண்டியூர் பகுதிகளிலும் பாலங்கள் கட்டுகிற பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படும்!" என சட்டப்பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**கோ.தளபதி:** மதுரை Apollo signal-ல் மேம்பாலம் கட்டும் பணி நீதிமன்ற வழக்கின் காரணமாக நிறுத்தப்பட்டு ள்ளது. வண்டியூர் கண்மாயின் கரையோரப்பகுதிகளில் ஆழமாகவும், பலமாகவும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. நீர்நிலைகள் பாதிக்கப்படுவதாக நீதிமன்றம் கருதுவதாக செய்திகளைப் பார்த்தோம். ஆனால், பாதுகாப்புச் சுவர் ஏற்கெனவே இருந்த கரையை விட உயரமாகவும், உறுதியாகவும் இருக்குமென்றும், மேம்பாலத்தினுடைய தூண்கள் சுமார் 200 மீட்டர் மட்டும்தான் கரையில் நிறுவப்படுகிறது. மற்றபடி எந்த விதத்திலும் நீர்நிலைகள் பாதிக்கப்படக்கூடாது என்றும், போக்குவரத்திற்கு மிகமிக அவசியமான மேம்பாலச் சாலையாக இருப்பதால், அதன் அவசியத்தினைக் கருத்தில்கொண்டு, நீதிமன்றத்திற்கு விளக்கமாக எடுத்துக்கூறி, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மேம்பாலப் பணியினை விரைந்து முடிக்க முன்வருவாரா?

**அமைச்சர் எ.வ.வேலு:** நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் அடங்கிய வல்லுநர் குழுவால் பாலத்தினுடைய வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு, அரசின் சார்பாக நெடுஞ்சாலைத் துறைக்கு ரூபாய் 150 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. புதிதாக அமையவிருக்கும் பாலம் வண்டியூர் கண்மாய் கரையில் அமையவிருப்பதால், தலைமைப் பொறியாளர், பொதுப் பணி, அவர்களுடைய தடையில்லாச் சான்று 10.11.2022 அன்று பெறப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக ஒப்பந்தம் கோரப்பட்டு, 30.11.2022 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டு, முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் அந்தப் பாலம் கட்டுகிற பணிகளைத் தொடக்கி வைத்தார்கள். தற்போது 10 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. ஆனால், இப்பொழுது அங்கே ஒரு பொது நல வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் தொடர்ந்தார்கள். அதுசம்பந்தமாக, நாம் ஏற்கெனவே, 11-1-2022 சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் counter போட்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் வண்டியூர் கரையை மாற்றி, அதைவிட cement concrete போடுவது, மண்சரிவைத் தடுத்து நிறுத்துவது என்ற அடிப்படையிலே ஒப்பந்தங்களில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் ஒரு தடையாணையை கொடுத்திருக்கிறார்கள். தடையாணையைக்கூட பார்த்தீர்கள் என்று சொன்னால் அந்த கண்மாய் பகுதிகளை மட்டும் விட்டுவிட்டு மீதிப் பாலப் பணிகளைக் கட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மீதியளவில் பாலங்கள் கட்டுகிற பணியானது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடுத்த hearing வருகிற பொழுது, main case-ஐ எடுத்து நடத்தி, அதற்கான அனுமதியைப் பெற்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கண்மாய் பகுதிகளிலும் பாலங்கள் கட்டுகின்ற பணிகளிலே முன்னுரிமை அளிக்கப்பட்டு துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று

### தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கை துவக்கி வைக்க வருகை தரும்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப். 23 -

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று (23ஆம்) தேதி காலை நடைபெறும் யூ இமேஜின் தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கை துவக்கி வைக்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திண்டு வந்து, கண்டோன்மெண்ட் பட்ரோடு அண்ணா சிலை அருகில் காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடு த்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:



இன்று (23ஆம் தேதி) காலை 10.00 மணி அளவில் ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் யூஇமேஜின், தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கம் துவக்க விழா நடைபெறவுள்ளது.

இந்த துவக்க விழாவில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கத்தை துவக்கி வைக்கிறார்.

இவ்விழாவிற்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் காலை 9.00 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இக்கருத்தரங்கினை துவக்கி வைக்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்ட மான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் - தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில்!

நெல்லை, பிப். 23 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. சார்பு அணிகளின் சார்பில் ஆலோசனை கூட்டம் மாநகர அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்)மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப் மீரான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்ற மாநகர தி.மு.க. சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவில் சிறப்பாக நிகழ்ச்சிகளை கொண்டாடுவது தொடர்பாக மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், தச்சை பகுதி துணை செயலாளர் ஸ்டார் முருகன், நெல்லை பகுதி பொருளாளர் பாஸ்கர், வட்டச் செயலாளர்கள் சடாமுனி, பேபி கோபால், சுப்ரித் சுப்பிரமணியன், மாநகரப் பிரதிநிதிகள் சிவா, வள்ளியின் செல்வன், கந்தன், ஜான்சன், மாநகர அணி நிர்வாகிகள் பத்மா, பிந்து செய்யது, ஆனிரேக்லண்ட், ஜோஸ் வனிதா, சுப்புலட்சுமி, கிருஷ்ணவேணி, ஷெட்டி, வழக்கறிஞர் சுரேஷ்குமார், தளபதி ஆறுமுகம், நச்சுனார் இனியன், செந்தில்குமார், வின் சென்ட் வினோத், விஸ்வநாதன், சண்முகசுந்தர், பிரேம் கணேச பெருமாள், ராமச்சந்திரன் முறுக்கு கடை கணேசன், லட்சுமணன், வெங்கடேஸ்வரன், செல்வகுமார், டைட்டஸ் கண்ணன், வினோத், ராஜா அப்பாஸ், சாதிக், சாலமோன், சோமு, சாகுல்ஹமீது, ஹமீம், சிரிப்பு சேக், அன்னராஜா, வேலாயுதம், ஐயப்பன், கார்த்திக், கழகப் பேச்சாளர்கள் மைக் மணி, பாம்பு கிருஷ்ணன், மில் குமார் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிறைவில் நெல்லை பேட்டை பகுதி அவைத்தலைவர் சுப்பையா நன்றி கூறினார்.




நேற்று (22.02.2024) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் காணொலிப் பாடங்கள் அடங்கிய மணற்கேணி இணையத்தளத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் ஆர்,சுதன் ராமசாமி, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# எல்லார்க்கும் ஆனவர்

உ ண ர் ச் சி க ள ா ல் ஒ ரு வி ழ ா

## சிறப்பு வாழ்த்தரங்கம்

நாள்: 2024 பிப்ரவரி 24, சனிக்கிழமை மாலை 6 மணி
இடம்: அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கம், சென்னை

தலைமை

மாண்புமிகு **துரைமுருகன்** அவர்கள்
நீர்வளத்துறை அமைச்சர், தி.மு.க. பொதுச்செயலாளர்

வாழ்த்துரை வழங்குவோர்

முனைவர் **எஸ்.ஜெகத்ரட்சகன்** எம்.பி.
தாயுமானவர்

திரு. **கம்பம் செல்வேந்திரன்**
தலைவருமானவர்

இயக்குநர் **வெற்றிமாறன்**
எதிர்காலத்துக்குமானவர்

திரு. **பாரதி கிருஷ்ணகுமார்**
முதல்வருமானவர்

முனைவர் **ம.எழிலரசி**
தந்தையுமானவர்

செய்திகள்

அனைவரையும் வருக.. வருக.. என அன்புடன் அழைக்கிறோம்!

**கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி**

---







**இராணிப்பேட்டை மாவட்டம்**
**பொது சுகாதாரம் (ம) நோய் தடுப்பு மருத்துவத்துறை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# மு.க.ஸ்டாலின்

அவர்களின் வாழ்த்துக்களுடன் வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் (2022-2023) புதிய 19துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டுவதற்கு நமக்கு நாமே திட்டத்தின் அரசு நிதி ரூ.4.4கோடி மற்றும் **SUN TV NETWORK LTD** வழங்கிய ரூ.2.21 கோடி ஆக மொத்தம் ரூ.6.65கோடி மதிப்பீட்டில் கீழ்க்காணும் கிராம ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா.

*புதிய கட்டிடங்களை திறந்து வைத்து விழா பேருரை...*

மாண்புமிகு. **இராணிப்பேட்டை ஆர்.காந்தி**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

மாண்புமிகு. **மா.சுப்பிரமணியன்**
மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர்

நாள் : 23.02.2024 - வெள்ளிக்கிழமை
இடம் : குடிமல்லூர் ஊராட்சி,ADC பகுதி
நேரம்: காலை 9.00 மணி

முன்னிலை

திருமிகு. முனைவர். **எஸ்.ஜெகத்ரட்சகன்** MP.,
முன்னாள் மத்திய இணை அமைச்சர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர்

**ஜெ.எல்.ஈஸ்வரப்பன்** MLA.,
ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர்

மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கலந்துகொள்கின்றனர்
ஆகவே தாங்கள் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்புடன் அழைத்து மகிழும்...* **சேஷா வெங்கட்ரமணன்**
வாலாஜா ஒன்றியக்குழு பெருந்தலைவர்
இராணிப்பேட்டை மாவட்டம்

## தமிழ்நாட்டில் பயிர்க்கடன் வழங்குவதில்

# கழக அரசின் வரலாற்றுச் சாதனையை மூடி மறைத்துவிட முடியாது!

### சட்டப்பேரவையில் - கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - ஆதாரங்களுடன் விளக்கம்!

**சென்னை, பிப். 23 – சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் செல்லூர் கே.ராஜூ கலந்துகொண்டு பேசியபோது, அவரது பேச்சில் நடுவே குறுக்கிட்டு, தமிழ்நாட்டில், கூட்டுறவுத் துறை மூலம் பயிர்க் கடன்கள் வழங்குவது குறித்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் புள்ளி விவர ஆதாரங்களுடன் விளக்க மளித்தார்.**

அப்போது அவர், "தமிழகத்தில் பயிர்க் கடன் வழங்குவதில் கழக அரசின் வரலாற்றுச் சாதனையை வழங்குவதில் மறைக்க முடியாது" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் நேற்று இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**செல்லூர் ராஜூ :** 2011 முதல் 2021 வரைக்கும் 10 ஆண்டுகளில் ஒரு கோடியே 6 இலட்சத்து 98,452 விவசாயிகளுக்கு 60,646 கோடி ரூபாய் பயிர்க்கடன் கொடுத்து விவசாயிகளுக்கு ஒளியேற்றி வைத்தது அம்மாவினுடைய அரசு. அண்ணன் எடப்பாடி அரசு என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அதே மாதிரி (குறுக்கீடு)

**அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்:** பயிர்க் கடன் கொடுப்பதில் நீங்கள் எந்தளவிற்கு இருந்தீர்கள் என்றால், 2011-2021 உங்களுடைய 10 ஆண்டு ஆட்சிக்காலம் வரை சராசரியாக 10 ஆண்டுக்காலத்தில் 6,000 கோடி ரூபாய்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இந்த அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, முதற்கட்டமாக 10 ஆயிரம் கோடியைத் தாண்டியது இந்த அரசில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு 12 ஆயிரத்து 600 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு 16 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இலக்கில் இன்று வரை 14 ஆயிரம் கோடி ரூபாயை எட்டப்பட்டிருக்கிறது. நீங்கள் எவ்வளவுதான் உரக்கக் குரல் கொடுத்தாலும், இந்த வரலாற்றுச் சாதனையை மூடி மறைத்துவிட முடியாது என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.



**அமைச்சர் தங்கம் தென்னரசு:** உறுப்பினர் செல்லூர் ராஜூ பேசுகிறபோது, கொரோனா காலத்தில் அள்ளிக் கொடுத்ததாகச் சொன்னார்கள். உண்மையிலேயே கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 4 ஆயிரம் ரூபாயை அள்ளிக் கொடுத்த வள்ளல் முதலமைச்சர் இங்கே இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அமைச்சர் துரைமுருகன்:** ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு ஒன்றை தெரிவித்துக்கொள்கிறேன். சபாநாயகர் அவர்கள், இன்றைக்கு வழக்கத்துக்கு மாறாக மிகவும் correct ஆக இருக்கிறார்கள். உறுப்பினர்கள் யாருக்கும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசுவதற்கு அனுமதி கிடையாது; எழுந்துவிடுவார். அதனால், உறுப்பினர் செல்லூர் ராஜூ அவர்கள், நம்மைப்பற்றி குறை சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்பதால், அவர்களுடைய ஆட்சியில் செய்தவற்றை யெல்லாம் சொல்லிட்டு, பத்து நிமிடங்களில் பேச்சினை முடிக்கப் பார்க்கிறார். (சிரிப்பு) நம்மிடம் அவர் வரவில்லை. உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**செல்லூர் ராஜூ :** நாங்கள் கூட்டுறவு வங்கிகளில் நிதிநிலையைப் பெருக்கி, மாவட்ட வங்கிகள் அனைத்தையும் online வர்த்தகத்திற்குக் கொண்டு வந்தது, டெபாசிட்டைப் பெருக்கியதால் தான், தற்போது உங்களால் பயிர்க் கடன் கொடுக்க முடிகிறது. அது நிதியமைச்சர் அவர்கள் ஒதுக்கிய நிதியிலிருந்து கொடுக்கும் நிதியல்ல.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** உறுப்பினர் செல்லூர் ராஜூ அவர்கள் குறிப்பிடுவதைப்போல, டெபாசிட்டை அதிகமாக வாங்கி வைத்திருந்தார்களேயானால், அந்த நேரத்திலேயே அவர்கள் கொடுத்திருக்க வேண்டியதுதானே! (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பத்தாண்டுக்கால சராசரியாக 6 ஆயிரம் கோடி ரூபாய்தான் இருந்திருக்கிறது. ஆனால், நாங்கள் தற்போது 13 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி, 16,500 கோடி ரூபாய் என்ற இலக்கை நோக்கிச் செல்கிறோம் என்றால், இது சாதனையா? அது சாதனையா?

**செல்லூர் கே.ராஜூ:** நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எவ்வளவு அற்புதமாகப் பேசினார்! கேட்டுக் கொண்டே இருக்கலாம்; கேட்டுக் கொண்டே இருக்கலாம். அப்படிப் பேசினீர்கள். உங்களுடைய சட்டை அழகு, நீங்கள் பேசியது அழகு, உங்கள் தமிழ் அழகு, ஒரு பேராசிரியருக்குரிய இலக்கணம். அப்படியிருந்தது. ஆனால், எல்லாமே இருந்தும், சரக்கு இல்லையே! சரக்கு இருந்தால்தானே நன்றாக இருக்கும்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி உண்டு. அது பழமொழிதான். அந்தப் பழமொழியை அப்படியே சொல்கிறேன். "சரக்கு மிடுக்கா செட்டியார் மிடுக்கா" என்று ஒரு பழமொழி உண்டு. இந்த பட்ஜெட்டில் சரக்கும் மிடுக்கு. அந்த பட்ஜெட்டை உருவாக்கிய முதலமைச்சர் அவர்களும் மிடுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்லூர் கே. ராஜூ:** எங்கள் ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்களை அதிகமாகச் செய்தோம். குறைந்த கடன் வாங்கினோம். ஆனால், இன்றைக்கு நல்ல பல திட்டங்களை, கோழிக்குஞ்சை கொடுப்பதை நிறுத்திவிட்டீர்கள்; கிராமப்புற பெண்களுக்கு பசுமாடு கொடுப்பதை நிறுத்திவிட்டீர்கள்; தாலிக்குத் தங்கம் கொடுப்பதை--பெண்களுடைய வாழ்க்கையை வசமாக்குவது; மாணவர்களுக்குக் கொடுக்கிற மடிக்கணினியை, (குறுக்கீடு).

**அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்:** நீங்கள் தருகிற அதிகமான சுதந்திரத்தை உறுப்பினர் தவறான வகையில் தகவலைப் பதிவு செய்கிறார். அனைத்துக் கடன்களும் கொடுக்கப்படுகின்றன. கால்நடைகள் கொடுக்கப்படுகின்றன. அவர் சொல்வதைப்போல கோழிக்குஞ்சுகளும் கொடுக்கப்படுகின்றன. எல்லாம் கொடுத்து, கடந்த இலக்குகளைவிட, சாதனையைவிட 5 மடங்கு இன்றைக்கு போய்க்கொண்டிருக்கிறது. அவர் ஏதோ ஒன்றைச் சொல்கிறார். நீங்களும் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். தயவு செய்து அதை அனுமதிக்க வேண்டாம். அனைத்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

## பாசிசத்தை வீழ்த்திக் காட்டி

# எங்கள் உரிமைகளை மீட்டெடுத்த வரலாற்றுச் சிறப்புக்குரியவர் முதல்வர்!

### சட்டப்பேரவையில் - சி.வி.எம்.பி.எழிலரசன் பேச்சு!

**சென்னை, பிப். 23– "பாசிசத்தை வீழ்த்திக் காட்டி, எங்கள் உரிமைகளை மீட்டெடுத்த வரலாற்றுக்குரியவர், எங்கள் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின்!" என்று, சட்டப்பேரவையில் நிதிநிலை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காஞ்சிபுரம் தொகுதி கழக உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

இந்த ஆண்டு நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பினை வழங்கிட்ட நம்முடைய கழகத்தின் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு பேசியதைப்போல, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரை வணங்கியும், தமிழ்நாடு வழங்கிட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை வணங்கியும், செம்மொழி தமிழை நமக்கு வழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி, இன்று அவர் துவங்கிய அதே உரையை நானும் வழிமொழிந்து, அவர் வழியில் வருங்கால தமிழகத்தை வழிநடத்த நம்பிக்கையோடு நாங்கள் காத்திருக்கும் எங்களின் இளம் தலைவர் தளபதி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இந்தப் பட்ஜெட் விவாதத்தில் உரையாற்றுகிற வாய்ப்பினை வழங்கிய பேரவைத் துணைத் தலைவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், அனைவருக்கும் என்னுடைய அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பட்ஜெட்டைப் பார்க்கிறபோது அங்கே நிதிநிலையில் இருக்கிற எண்ணிக்கைகள் தெரியவில்லை, அதில் பயன்பெறுகிற பயனாளிகள்தான் என் கண்ணுக்கு தெரிகிறது. இது மக்களுக்கான பட்ஜெட்டாக, அனைவருக்கும் அனைத்தும், எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியினுடைய பட்ஜெட் விளக்கம் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. அண்ணன் தங்கம் தென்னரசு அவர்கள் உரையாற்றுகிறபோதெல்லாம் சங்கத் தமிழ் பாடல்கள் இடம்பெறும், அவரது உரையே பல நேரங்களில் கவிதையாகக் காட்சியளிக்கும். நமக்கு காதுகள் இனிக்கும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில், மக்களுக்குக் கவிதையாகவே நிதிநிலை அறிக்கையை வழங்கியிருக்கிறார் அதற்காக அவர்களுக்கு நாங்கள் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தடைகளைக் கடந்து வளர்ச்சியை நோக்கியது இந்த நிதிநிலை அறிக்கை. எப்படிப்பட்ட தடைகள் என்று சொன்னால் பேரிடர்கள். பேரிடர் என்று சொன்னவுடன் நினைவுக்கு வருவது அவரே குறிப்பிட்டதைப்போல 'It's a twin disaster' என்று சொன்னார்கள். இரண்டு பேரிடர்கள் என்று சொன்னார். ஒன்று இயற்கையின் பேரிடர், மற்றொன்று செயற்கையின் பேரிடர். இயற்கைத் தந்தப் பேரிடரை சென்னையும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களும் அறிந்தது. தூத்துக்குடி அதைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் அறிந்தது. செயற்கைப் பேரிடர், நம்முடைய ஒன்றிய அரசு தந்திருக்கக்கூடிய பெரும் பேரிடர், நிதி நெருக்கடி பேரிடர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதையும் கடந்து வந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை இது. இந்த நிதிநிலை அறிக்கையில், கலைஞரின் கனவு இல்லம் என்று ஒரு திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. கலைஞரின் கனவு இல்லம் என்பது மிக நீண்ட நெடிய காலத்திற்கான கனவு என்று சொன்னார்கள்.

1975 ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, குடிசைகளற்ற தமிழ்நாட்டை உருவாக்குவதற்காக ஏற்கெனவே அவர் தொடங்கிவிட்ட கனவு அது. அதை காலங்காலமாக நிறைவேற்றி வந்திருந்த நிலையில், இப்போது உருவாக்கியிருக்கின்ற நிலையின்படி கண்டெடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் என்னவென்றால், ஒன்றிய அரசினுடைய NITI Aayog வழங்கியிருக்கக்கூடிய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் multidimensional என்று சொல்லக்கூடிய வகையில் poverty line-வறுமைக்கோட்டிற்குக் கீழே 2.2 சதவிகிதம் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவர்கள் என்று கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 2.2 சதவிகிதம் இருப்பவர்களையும் நாங்கள் கண்டெடுப்போம் என்று சொல்லி, அதற்காக ஒரு திட்டத்தினை தலைவர் அவர்கள் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள்.

இது ஒரு பக்கம் என்றால், 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டம் என்பது பெயர் மாற்றப்பட்டு வந்த திட்டமல்ல, கலைஞரின் உண்மையான கனவு திட்டம் அது. ஏன் இதைக் குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால், இன்றைக்கு பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்திற்கு 2.1 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது என்றால் அதில் 72 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் ஒன்றிய அரசினுடைய பங்களிப்பு. மீதமெல்லாம் தமிழ்நாடு அரசினுடைய பங்களிப்பாக இருக்கக்கூடியது. ஆனால், இதில் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு மாநில அரசின் பங்களிப்பால் 3.5 இலட்சம் ரூபாய் வழங்கி கட்டப்பட இருக்கக்கூடிய வீடுகள் என்பதை மறந்துவிட கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இது முழுக்க முழுக்க மாநில அரசால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கலைஞரின் கனவு இல்லத்தை ஓராண்டிற்கு ஒரு இலட்சம் வீடுகள் என்று வழங்க இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் NREG-கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக கண்டெடுக்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, ஒன்றிய அரசில் இடம் பெற்றிருந்த கூட்டணியின் மூலமாக, மன்மோகன்சிங் அவர்களிடம் கேட்ட கோரிக்கை அது. Micro economics என்று பொருளாதார நிபுணர்களால் பாராட்டப்படுகிற திட்டம் அது. கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு குறைந்தபட்டம் 100 நாட்கள் வேலைவாய்ப்பை தர வேண்டுமென்று உருவாக்கப்பட்ட திட்டம் அது. அந்தத் திட்டத்தினை குறைந்து, குறைந்து என்று சொல்லி இப்போது ஒன்றிய அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் 30 சதவிகிதம் அளவிற்கு நிதியைக் குறைத்திரு க்கக்கூடிய நிலையில், தமிழ்நாட்டில் 3,300 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்வேன் என்று வழங்கியிருக்கக்கூடிய திட்டம் எப்படிப்பட்ட திட்டம் என்று யோசித்து பாருங்கள். ஒரு ஆண்டு முழுவதற்கும் 92 இலட்சம் பேர் அதில் பயன்பெறுகிறார்கள்.



78 இலட்சம் பேர் பெண்கள் மட்டுமே அதில் இடம் பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தினை வழங்கியிருக்கிறார்கள் முதல்வர் அவர்கள். நான் கோரிக்கையாக நிதியமைச்சர் அவர்களுக்கு வைக்கக்கூடியது என்னவென்றால், நம்முடைய தேர்தல் அறிக்கையில் வைத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளில் ஒன்று 300 ரூபாய் வரைக்கும் உயர்த்துவேன் என்று. முதலமைச்சர் அவர்கள் சொன்ன தன் அடிப்படையில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் 294 ரூபாய் வரை உயர்த்தி வழங்கப்படுமென்று சொல்லியிருக்கிறார். இன்னும் 6 ரூபாய் சேர்த்து 300 ரூபாய் வழங்கிவிட்டால், 300 ரூபாய் வழங்கிவிட்டோம் என்று அந்த இலக்கை அடைந்த மாநிலமாய் நம்முடைய மாநிலம் அமைந்துவிடும் என்பதற்காகவே நான் கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கிராமப்புறம் என்றாலே, குடிநீர் வடிகால் வாரியத்தைக் கொண்டுதான் ஒட்டுமொத்தமாக 1970 ஆம் ஆண்டுகளிலே பாதுகாக்கப்பட்ட குடிநீரை விநியோகிக்கின்ற திட்டத்தினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம். இன்றைக்கு யோசித்து யோசித்து Jal Jeevan Mission என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 20 கோடி பேருக்கு தண்ணீர் வழங்குகிறோம் என்று பிதற்றிக்கொண்டி ருப்பவர்களுக்கு, 50 ஆண்டு காலத்திற்கு முன்பாகவே பாதுகாக்கப்பட்ட குடிநீரை தமிழ்நாடு முழுவதும் அனைத்து கிராமங்களிலும் வழங்கியர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டங்களில் குடிசை மாற்று வாரியம் என்பது கடந்த கால ஆட்சியில் முடக்கி போடப்பட்டு, அப்படி ஒரு துறை இருக்கிறதா என்று தெரியாத அளவிற்கு போய்விட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்கு செல்கின்ற நேரங்களிலெல்லாம் மக்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்தக் கோரிக்கை இருக்கிறது. அதைக் கண்டெடுத்து, இன்றைக்கு 2 ஆயிரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டித் தரப்படும் என்று வழங்கியிருக்கிறார்களே, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

கடந்த காலங்களில் குடிமராமத்து பணி என்ற பெயரால் சொல்லப்பட்டது. ஏரிகள் தூர்வாரப்பட்டதா, இல்லையா என்பது தெரியாது. ஆனால், 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக செலவழிக்கப்பட்டது மட்டும்தான் பட்டியலில் வந்திருக்கிறது. ஆனால், இப்போது சொல்கிறேன், 5 ஆயிரம் நீர்நிலைகள் கிராமப்புறங்களில் இருக்கக்கூடியதை கிராமப்புற மக்களைக் கொண்டே அங்கேயே நாங்கள் நிர்வகிப்போம், செய்து காட்டுவோம் என்று சொல்லியிருக்கிறாரே, இந்த நீர்நிலைகளை பாதுகாப்பதன் மூலமாக, பெரும் நீர்நிலை களினுடைய நிலத்தடி நீர் நிலையை உயர்த்துகின்ற வகையில் நிலத்தடி நீர் நிலைகளை முறைப்படுத்த திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம் என்பது முக்கியமான ஒரு திட்டமாக கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டம். 1,000 கோடி ரூபாயில் ஏற்கெனவே நிறைவேற்றப்பெற்றிருக் கிறது. பல கிராமப்புற சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கக்கூடிய சாலையாக இருக்கிறது. கப்பி சாலையாக அல்ல; BT சாலையாகவே உள்ளது. அதை இந்த ஆண்டும் நீட்டித்து தரப்படுவதாக சொல்வது கிராமப்புறங்க ளுக்கும், நகர்ப்புறங்களுக்கும் ஓர் இணைப்பு. ஏனென்றால் நகரமயமாதல் என்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 55 சதவிகிதத்தை கடந்துவிட்ட நிலையில் இருக்கிறது.

ஆனால், அதை கிராமப்புறத்தில் இருக்கிறவர்கள், கிராமப்புறத்தில் இருந்துகொண்டே அவர்கள் தேவையான வசதிகளைப் பெறுவதற்கு நகர்ப்புறத்திற்கு connectivity என்று சொல்லக்கூடிய சாலைகளை உருவாக்கித் தருகிற திட்டம் அது என்று சொல்லி, (மணியடிக்கப்பெற்றது) உருவாக்கி மீண்டும் mini bus திட்டம் வரும் என்று உருவாக்கியிருக்கிறார்கள் இந்தத் திட்ட த்தினை. . .

பா.ஜ.க அரசு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் பெயரைச் நான் சொல்வதற்குக்கூட கூச்சமாக இருக்கிறது. ஏனென்றால் அப்படி ஒரு பெயரை சில சாதியினர் எங்கள் பெயரைக் குறிப்பிட்டு எங்களை இழிவுபடுத்துவதாக அந்தத் திட்டம் இருக்கிறது என்று எங்களிடம் குறைபட்டா ர்கள். அது எதுவென்று சொன்னால் குலத் தொழிலை ஏற்படுத்துவோம் என்று ஒரு திட்டத்தினை அறிவிக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. ஆனால், மாற்றாக எங்களுடைய தலைவர் அவர்கள், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கைவினை மேம்பாட்டுத் திட்டம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். யாருக்கெல்லாம் எதில், அவர் பிறப்பால் அல்ல, அவருடைய திறனால், அவருடைய ஆர்வத்தால் எந்தத் துறையில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ அதை மேம்படுத்துவதற்கான திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், ஒன்றிய அரசு என்ன சொல்கிறது என்று சொன்னால், எந்தப் பிறப்பில் நீ பிறந்தாயோ அந்தப் பிறப்பின் அடிப்படையில் உன் மூதாதையர் செய்யக்கூடிய தொழிலை நீ செய்வதற்கு முன்வருவாயேயானால் உனக்கு நிதி தருகிறேன் என்று சொல்லக்கூடிய சனாதனத்தை எதிர்க்கக்கூடிய திட்டத்தை இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே வாக்குகளுக்கான, தேர்தலுக்கான நிதிநிலை அறிக்கை இது வல்ல. ஏனென்று சொல்கிறேன் என்றால், வாக்குகளைக் கடந்து வாழ்கிற மக்களுக்கான நிதிநிலை அறிக்கை இது. எப்படி சொல்கிறேன் என்று சொன்னால் cancer என்று சொல்லக்கூடிய, புற்றுநோயால் பாதிக்கக்கூடியவர்கள் எத்தனை ஆயிரங்கள், எத்தனை இலட்சங்கள் இன்று உருவாகியிருக்கிறது. இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல அருகிலிருக்கிற ஆந்திர, தெலங்கானா போன்ற மாநிலத்தைச் சார்ந்தவர்களும் பாதிக்கப்படுகிறவர்கள் நாடி வரக்கூடிய இடம் ஒன்று அடையாறில் இருக்கக்கூடிய Cancer Institute என்று சொன்னால், மற்றொன்று சென்னையிலிருக்கக்கூடிய அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை. இந்தியாவிலேயே Tata Memorial Hospital என்று சொல்லக்கூடிய Cancer Institute தான் இன்றைக்கு 600 படுக்கைகளோடுகொண்டு பல வசதிகளைக் கொண்ட ஒரு மருத்துவமனை. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, இன்றைக்கு என்ன நிலவரம் என்று சொன்னால் 750 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையாக உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் Palliative care என்று சொல்லக்கூடிய. . .

Palliative care என்று சொல்லக்கூடிய அதையும் உள்ளடக்கிய ஒரு திட்டத்தை உருவாக்குகிறார்கள் என்று சொன்னால் அனைத்துத் தரப்பு மக்களுக்கான ஒரு திட்டத்தை தந்துகொண்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் நாம் எப்படிப்பட்ட நெருக்கடி நிலையில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். நன்றாக கவனித்துப் பாருங்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னேன். ஒன்றிய அரசு தருகிற நிதியில் நம்மிடம் இருந்து பெறுகிற வரிப் பணத்திலிருந்து 15th Finance Commission பரிந்துரைக்கப்பட்டிருக்கக்கூடிய 41 சதவிகிதத்தை நமக்கு தரவேண்டும். ஆனால், தருவதற்கு மாறாக 30 சதவிகிதத்தைத்தான் தருகிறது. காரணம் அந்த common pool என்று சொல்லக்கூடிய divisible pool-லிலிருந்து வழங்க வேண்டியதைத் தராமல் cess என்று surcharge-ல் எடுத்துக்கொண்டு மீதத்தில் இருக்கக்கூடியதை (மணியடிக்கப்பெற்றது) ஒரு ரூபாயில் என்று சொல்வதற்குப் பதிலாக. . .

ஆகையினால் நமக்குத் தர வேண்டிய தொகை பரிந்துரைத்ததைவிட 10 சதவிகிதம் குறைகிறது. இது ஒரு பக்கம் என்றால், இன்னொரு வஞ்சனை என்னவென்று சொன்னால் அதாவது, participation என்று சொல்லக்கூடிய ஒன்றிய அரசினுடைய பங்களிப்போடு நடைபெற வேண்டிய திட்டங்களுக்கும் நிதி குறைவாக தருகிற நிலையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். வீடு கட்டும் திட்டத்திற்கு சொன்னேன். அதே போலத்தான் crop insurance-லும் அவர்களுடைய பங்களிப்பு 49 சதவிகிதம் என்று சொல்லிவிட்டு இன்றைக்கு 33 சதவிகிதம்தான் தருகிறார்கள் என்று சொன்னால் எல்லாத் திட்டங்களிலும் ஒன்றிய அரசு வஞ்சித்துக் கொண்டிருக்கிறது.

அண்ணா அன்றைக்கே சொன்னார், நாங்கள் கோரிக்கை வைத்தோம், அந்த கோரிக்கையில் என்ன சொல்கிறார் என்று சொன்னால், ஒரே வார்த்தையில் சொல்கிறேன். முறையிடுகிறேன், கனிவும், பணிவும் குறையாமல் வம்பு வல்லடி போக்கு துளியுமின்றி, ஆனால், கிடைக்கிறதா? நிரம்பக் காரணங்கள், நியாயங்கள், வாதங்கள், எதற்கு? எவ்வளவுக்குமேல் பணம் தருவதற்கு இல்லை என்பதற்கு ஏன் செய்வேன் என்று கேட்டிருக்கிறார்கள் அண்ணா அவர்கள். அன்றைக்கு முதலமைச்சராய் 1968-லே கேட்ட குரல், இன்றைக்கு 2024-விலும் அதேக் குரல் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. காரணம், மாநில சுயாட்சி நமக்கு தேவை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நாம் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்பதனை நிருபிக்கக்கூடிய தேர்தல் வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) உரிமைகளை மீட்டெடுப்போம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி மீட்டே தீருவார், (மேசையைத் தட்டும் ஒலி) பாசிசத்தை ஸ்டாலின் கள்தான் வீழ்த்தியிருப்பது வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை எங்களுடைய தலைவர் அவர்கள் வீழ்த்திக் காட்டி உரிமைகளை மீட்டெடுத்த வரலாற்றுக்குரியவர் எங்களுடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் வருகின்ற தேர்தலிலே மீட்டுக் காட்டுவார் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் பேசினார்.



பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.366 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், பெரம்பலூர் மாவட்ட பொதுமக்கள் மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். பழைய பேருந்து நிலையத்தில் உள்ள காமராஜர் வளைவு, புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜ்குமார்,வீ.ஜெகதீசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல் பாரூக், மாவட்ட கவுன்சில் தலைவர் ஆர்.ரெங்கசாமி, எம்.மணிவாசகம், அ. அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், பா.ரினோபாஸ்டின், சபியுல்லா, ந.முத்துக்குமார், து.ஹரி பாஸ்கர், ரகமத்துல்லா, சித்தார்த்,நல்லுசாமி,சேகர், மணிவேல், தங்க.சண்முகசுந்தரம், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவையில்

# 2023 - 24 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மதிப்பீடுகள்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு - தாக்கல் செய்து உரை!

சென்னை, பிப். 23-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து உரையாற்றினார். பின்னர், இத்துணை மதிப்பீடுகள், குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையில் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:

2023-2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளின் விளக்கக்குறிப்பு விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்த துணை மதிப்பீடுகள் மொத்தம் 30,355.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில் 26,590.09 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 3,499.98 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 265.25 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளன்று 2023-2024 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் "புதுப் பணிகள்" மற்றும் "புது துணைப் பணிகள்" குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக்



கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக 15,593.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண்51-இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 1,486.93 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கை எண்51-இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எதிர்பாராத தொடர் மழைப் பொழிவு மற்றும் வெள்ளப் பெருக்கால் தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக 541.37 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கு கூடுதல் செலவினமாக 1,055.34 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, 2023-2024 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

இவ்வாறு - நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு திருவிழா! பெருங்கவிக்கோ வா.மு.சே.தலைமையில்

# 100 கவிஞர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு விழாக் கவியரங்கம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

சென்னை, பிப்.23-

தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை! என்பதை வலியுறுத்தி, 1991ஆம் ஆண்டு முதல் எங்கும் தமிழ்! எதிலும் தமிழ் வேண்டுமென கன்னியாகுமரி முதல் சென்னை வரையில் 50 நாட்கள் நடந்து வந்தோம்!

தொடர்ந்து வரும் இப்பயணத்தில் இவ்வாண்டும் தமிழுக்கு முதன்மை! என்ற குறிக்கோடு தமிழ், தமிழ்நாட்டு மக்கள் மற்றும் உலகளாவிய தமிழ் உணர்வாளர்களின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையும், கன்னியாகுமரி - சென்னை 12.2.2024 முதல் 24.2.2024 ஆம் நாள் வரை பரப்புரை ஊர்திப்பயணம் செய்து வருகிறோம்.

இதன் நிறைவு நாளான 24.2.2024 ஆம் நாள் இப்பயணம் சென்னையில் நிறைவடைகிறது! பல்துறை வித்தகர், உவமை கூற முடியாத உன்னதக் கவிஞர் முத்தமிழறிஞர் கலைஞர் தம் அளப்பரிய சாதனைகளைப் பாராட்டும் முகத்தான் அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கி வைக்க பெருங்கவிக்கோ வா.மு.சே. தலைமையில் 100 கவிஞர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு விழாக் கவியரங்கம் நாளை (24.2.2024-சனிக்கிழமை) காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை 573, மேற்கு நிழற்சாலை, மகாகவி பாரதியார் நகர், வியாசர்பாடி, சென்னை -39 (அண்ணல் அம்பேத்கர் கல்லூரி அருகில் அமைந்துள்ள குரு சந்திரா திருமண மாளிகையில் நடைபெறுகிறது. இதில் கலைஞருக்கு வீரவணக்கம் - புகழ் அஞ்சலி பாடவுள்ளனர்.

தமிழ் மாமணி வா.மு.சே.திருவள்ளுவர் (இயக்குநர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்) முனைவர் சோ. கருப்பசாமி, அருட்செல்வர் கூ.குருமூர்த்தி (குரு சந்திரா திருமண மாளிகை), மதுரகவி மறத்தமிழன், தலைவர் அண்ணாநகர் தமிழ்ப்பேரவை, செம்மொழிப் போராளி க.ச.கலையரசன், கவிச்சுடர் முனைவர் சிந்தைவாசன், கவிஞர் வீரமுத்து ஆகியோர் விழா ஏற்பாட்டுக் குழுவினராக செயல்படுகின்றனர்.

விழா நிறைவில் உலகத் தமிழ்ச் சங்க நிறுவனர் வி.ஜி.சந்தோசம், பேராசிரியர் மா.செல்வராசு, கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் முனைவர் வா.மு. சே.முத்துராமலிங்க ஆண்டவர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சு.சுதர்சனம், பேராசிரியர் பொன்.செல்வ கணபதி, தமிழ்ச்செம்மல் மேலை பழனியப்பனார் ஆகியோர் வாழ்த்துரையாற்றுகின்றனர்.

முனைவர் சோ.கருப்பசாமி நன்றி கூறுகிறார்.

சேந்தமங்கலம் தொகுதி

# கொல்லிமலையில்-மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் நிலையம் அமைப்பீர்!

## சட்டப்பேரவையில் கே.பொன்னுசாமி வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.23-**

**சட்டப்பேரவையில், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லி மலையில் மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் நிலையம் அமைத்திட வேண்டும் என கே.பொன்னுசாமி வலியுறுத்தினார்.**

**இது குறித்து அவர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அளித்த பதிலும் வருமாறு:-**

**கே.பொன்னுசாமி:** சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் மிளகு, காப்பி மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றிற்கான கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** S.N. 210, கொல்லிமலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக, சங்க உறுப்பினர்களிடமிருந்து மிளகு, காப்பி போன்ற வேளாண் விளைப்பொருட்கள் நியாயமான விலைக்கு கொள்முதல் committee மூலமாக ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக ஒரு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**கே.பொன்னுசாமி:** நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அதிகப்படியாக மிளகு, காப்பி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற விளைப்பொருட்கள் S.N.210 கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக குறைந்த அளவில் கொள்முதல் செய்கிறார்கள். இக்காலக்கட்டத்தில் அதிகப்படியான மிளகு இருப்பு வைக்கின்ற நிலை ஏற்படுகிறது. அதனால் கொள்முதல் நிலையம் அமைத்தால் விவசாயிகளுக்கு உரிய விலைகள் கிடைக்கும் என்பதால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** ஏற்கெனவே செயல்பாட்டில் இருக்கின்ற காரணத்தால் தேவைக்கேற்றவாறு, ஒருவேளை பொருட்களின் உற்பத்தி அதிகமாக இருப்பின், அவற்றை விரிவுபடுத்துவ தில் ஏதுமில்லை. புதியதாக ஒரு மையம் அமைப்பதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. எதிர்காலத்தில் அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.



**கே. பொன்னுசாமி:** கொல்லிமலை மிளகு மருத்துவ குணம் கொண்டது. உலகம் முழுவதும் கொரோனா தொற்று பரவிக்கொண்டிருந்த காலக்கட்டத்தில்கூட கொல்லிமலையிலே அதிகளவில் பாதிப்பு ஏற்படவில்லை. ஆகவே, டெல்டா விவசாயிகளுக்கு நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது போன்று, கொல்லிமலையிலே மிளகு சாகுபடி, மரவள்ளி பயிர்களுக்கு கொள்முதல் நிலையம் அமைக்க ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன்:** விரிவான விடையை நான் உறுப்பினர் அவர்களுக்கும், சபைக்கும் தருகின்றேன். சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தில், உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல சிறப்பான மிளகு கொள்முதல் செய்யப்படுகிறது. காப்பி போன்ற பொருட்களை அவற்றின் தரம், ஈரப்பதம் ஆகியவற்றை பரிசோதித்து உரிய முறையில் நியாயமான விலைக்கு கொள்முதல் committee மூலமாக விவசாய உற்பத்திக் குழுக்கள், அதாவது FPO மூலமாகவும், மிளகு, காப்பி கொள்முதல் செய்யப்படுகிறது. அப்பொருட்களை, சங்கத்தில் உள்ள பதப்படுத்தும் ஆலையின் மூலமாக பதப்படுத்தி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, தரமாக packing செய்யப்பட்டு, கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மற்றும் Tampcol ஆகிய நிறுவனங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எனவே, இச்சங்கத்தின் உறுப்பினர்கள் விளைவிக்கும் மரவள்ளிக் கிழங்கினைப் பொறுத்தவரையில், சோளக் காடு கொள்முதல் மையம் மூலமாக ஏற்கெனவே கொள்முதல் செய்து, Sago ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால், தற்போது காபி, மிளகு, அன்னாச்சி மற்றும் வாழை உள்ளிட்ட பயிர்கள் விளைவிக்கப்படும் பரப்பளவு அதிகரித்திருக்கிறது. மரவள்ளி சாகுபடி செய்கின்ற விவசாயிகள் பரப்பளவை குறைத்திருக்கிறார்கள். ஆகவே, மேற்படி கொல்லிமலைப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் பரப்பளவு குறைந்ததாலும், ஆலை அதிபர்கள் ஒத்துழைப்பு இல்லாத நிலையிலும் கொல்லிமலையில் மரவள்ளிக் கிழங்கு கொள்முதல் நிலையம் உடனடியாக அமைக்க வழிவகை இல்லை.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் சிறுவாடி ஊராட்சியில் பிரதம மந்திரிகுடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து பயனாளிகளிடம் ஒப்படைத்தார். உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, ஒன்றியக் குழு தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளனர்.

"அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளமல்ல - பெருமையின் அடையாளம்" என்பதை உறுதி செய்திட

# அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை அதிகரித்திடுவீர்!

## ஆசிரியர்கள் - பணியாளர்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள்!

சென்னை, பிப்.23-

2024-2025 ஆம் கல்வியாண்டில், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை அதிகரிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் அலுவலர்கள், இருபால் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் முழுமுயற்சியோடு பணியாற்றிட வேண்டுமென பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

"கல்வி மட்டுமே சமத்துவம் மலரச்செய்யும் மிகப் பெரிய ஆயுதம்"என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கூற்றை மெய்ப்பித்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களில் கல்வி வளர்ச்சியில் நம் தமிழ்நாடு முன்னிலை பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, தொடங்கப்பட்ட பல்வேறு புதிய திட்டங்களால் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை வெற்றிநடை போட்டு வருவதைக் காணலாம்.

கல்வியில் ஒரு மாநிலம் உயர்ந்த நிலையைப் பெறுகின்ற பொழுது, பல்வேறு துறைகளில் இயல்பாகவே உயர்வு பெறும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகப்படுத்தியுள்ளார்கள். எந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு அதிகரித்துள்ளதோ அதை மனதிற்கொண்டு, அந்நோக்கத்தைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

### கல்விக்கான முதலீடு!

முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை செலவாகக் கருதாமல் கல்விக்கான முதலீடாகக் கருதுவதாக தெரிவித்துள்ளார்கள். இதனை பள்ளிக்கல்வித் துறையில் உள்ள அலுவலர்கள், இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

மாணவர் நலமே மாநில வளம் என்னும் உயரிய எண்ணத்தோடு செயல்பட்டு வருவதை நாம்



அனைவரும் நன்கு அறிவோம். முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித்துறைக்கு 2021-22 -ஆம் நிதியாண்டிற்கு ரூபாய். 32,599.54 கோடியும்; 2022-23-ஆம் நிதியாண்டிற்கு ரூ.36,895.89 கோடியும்; 2023-24-ஆம் நிதியாண்டிற்கு ரூ.40,299.32 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் ரூபாய். 44,042 கோடி ஒதுக்கியுள்ளார்கள். ஆக மொத்தம் ரூபாய். 1,53,796 கோடி பள்ளிக்கல்வித் துறைக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இடைநிற்றல் குறைந்துள்ளது!

தமிழ்நாடு அரசு கல்வித் துறைக்கென இதுவரை 57-திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருவதால் மாணவர்களின் கல்வித் தரம் உயரும் வகையில் மிகப் பெரிய வளர்ச்சியை கல்வித்துறை பெற்றுள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் உயர்ந்துள்ளது. இடைநிற்றல் மிகவும் குறைந்துள்ளது.

இல்லம் தேடிக்கல்வித் திட்டத்தால் கொரோனா காலத்தில் ஏற்பட்ட கற்றல் தேக்க நிலை முற்றிலும் குறைந்துள்ளது. எண்ணும் எழுத்தும் திட்டத்தின் மூலம் மாணவர்களின் கற்றல் திறன் மேம்பட்டுள்ளது. "நான் முதல்வன்" திட்டத்தால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களில், பலர் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பயில வாய்ப்பு உருவாகியுள்ளது.

கலைத்திருவிழாவின் மூலம், மாணவர்களிடத்தில் பொதிந்துள்ள பல்வகை ஆற்றலை வெளிக்கொணர்கின்ற சூழல் உருவாகியுள்ளது. "நம் பள்ளி நம் பெருமை" திட்டத்தினால் அரசுப் பள்ளிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### காலை உணவுத் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு!

"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" இந்திய ஒன்றியத்திலேயே, முதன்முதலாக நம் தமிழ்நாட்டில் தான் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு, மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இதனால் பள்ளிக்கு வருகை கூடியுள்ளதோடு கற்கும் ஆர்வமும் கூடியுள்ளதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதன் மூலம் "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்" என்ற மகாகவியின் கனவு நிறைவேறியிருக்கிறது. "மணற்கேணித் திட்டம்" - நன்கு திட்டமிட்ட வழிகாட்டுதலுடன் கூடிய கற்றல் பயணத்திற்கு வழிவகுத்து கற்றனைத்தூறும் அறிவைச் சுரந்து கொண்டிருக்கிறது.

மாணவர்களின் மனதிற்கு மகிழ்வூட்டும் கல்விச் சுற்றுலா, ஊஞ்சல், தேன்சிட்டு இதழ்கள், தமிழ்மொழியின் ஆற்றலை பெருமையை மாணவர்கள் விரும்பி அறிந்திட தமிழ்க்கூடல், மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சி, வாசிப்பு இயக்கம் போன்ற பல்வேறு நல்ல திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகின்றது.

"விழுதுகள்" திட்டம் மூலம் அரசுப் பள்ளிகளில் பயின்ற மேனாள் மாணவர்களை அழைத்து வந்து அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு மேம்பட அவர்களின் பங்களிப்பை உறுதி செய்யும்முன்னெடுப்புகள் நடைபெற்று வருகின்றன.

பேராசிரியர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கென ரூபாய். 7,500 கோடி மதிப்பீட்டில் "பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்" என்ற மாபெரும் திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்திட அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று இதுவரை, 2487 கோடி மதிப்பிலான 3601 வகுப்பறைகள், ஆய்வகங்கள், உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் மேலும் ரூபாய். 1,000 கோடி பள்ளிக் கட்டமைப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றும் உயர்ந்த நோக்கத்தோடு கடந்த மூன்று ஆண்டுகளில் 38 மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### 80 ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி!

மேலும் நவீன தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் உயர்தர கற்றல் - கற்பித்தல் சூழலை உருவாக்கவும், அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளில் 8,209 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech labs) மற்றும் 22,931 தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class rooms) அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன. மேலும் 80,000 ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி வழங்கப்பட உள்ளது, இதனால் வரும் கல்வியாண்டில் அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர்களுக்கு உயர்தர தொழில்நுட்ப வசதிகளுடன் கற்றல் கற்பித்தல் பணிகள் நடைபெற வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் ஆகியோர் ஒன்றிணைந்து அனைத்து பள்ளி வயதுடைய குழந்தைகளையும் அரசுப் பள்ளிகளில் சேர்த்திட பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

"அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல

பெருமையின் அடையாளம்" என்பதை உறுதி செய்வோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வேலூர் வருகை!

## க.தேவராஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருப்பத்தூர், பிப்.23-

கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வேலூர் வருகைத் தர உள்ளதால் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ள செய்ய திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத்தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி, 2024 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச்செயலாளர், நாடாளுமன்ற கழக குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி, தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழநிவேல் தியாக ராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி, எம்.எம்.அப்துல்லா எம்.பி, சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட குழுவினர் இன்று (23 ஆம் தேதி - வெள்ளிக்கிழமை)



காலை 9 மணிக்கு வேலூர் புதிய நகராட்சி அலுவலகம் எதிரில் பேபி மஹாலில் பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதுசமயம் திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த தொழில்துறையினர், வியபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட ஏதுவாக மேற்கண்ட அனைவருக்கும் தகவல் தெரிவித்து அவர்களை வேலூருக்கு அழைத்து வர உரிய ஏற்பாடுகளை அந்தந்த நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் செய்ய கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளனர்.



கழகத் தலைவர்–தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் காணொளி காட்சி மூலம் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தை திறந்து வைத்தார். இதனையடுத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஒன்றிய குழு தலைவர் ஹேமலதா விஜயகுமார், துணை தலைவர் புவனேஸ்வரி செந்தில்குமார், ஒன்றிய செயலாளர்கள் விஜயகுமார், ரத்தினவேல், முன்னாள் எம்.எல்.ஏ. புஷ்பராஜ், சங்கர், கோபால், சந்திரமோகன் மற்றும் அரசு அதிகாரிகள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அரசியலின் மகுடம் - 'எல்லோர்க்கும் எல்லாம் வேண்டும்' என எண்ணும் இதயம் -

# மக்கள் பெருங்கடலின் மகத்தான தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் 71-வது பிறந்த நாள் விழா !





## சென்னை கிழக்கு மாவட்டத்தில் 71 'சூரியச் சுடர்' நிகழ்ச்சிகள்!

## பிப். 22 முதல் மார்ச் 19 வரை நடைபெறுகிறது!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

**மக்கள் முதல்வரின் மனிதநேயத்திருவிழா**
**பிப்ரவரி 22 முதல் மார்ச் 19 வரை**
**71 சூரியச்சுடர் நிகழ்ச்சிகள்**

**ஒரு நூற்றாண்டு கால அரசியலின் மகுடம், எல்லோர்க்கும் எல்லாம் வேண்டும் என எண்ணும் இதயம், மக்கள் பெருங்கடலின் மகத்தான தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா.**

**இப்பெருமைமிகு பிறந்தநாள் விழாவை, சென்னை கிழக்கு மாவட்டம் "சூரியச்சுடர் விழா"வாக நலத் திட்டங்கள், கருத்தரங்கம், கவியரங்கம், பொதுக் கூட்டங்கள் என 71 நிகழ்ச்சிகள் நடத்தி கழகத்தலைவரின் புகழுக்கு புகழ் சேர்ப்போம்.**

**இவ்விழாக்களுக்கு திரளாக வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.**

அன்புடன்
**பி.கே.சேகர்பாபு**
**சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்**
**அமைச்சர் இந்து சமய அறநிலையத்துறை**
**மற்றும்**
**சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம்**

**சூரியச்சுடர் 1**
**இதயங்கள் இணைதல் திருமணம்**
**எல்லோரும் இணைதல் திராவிடம்**

நாள்: 22.02.2024, வியாழக்கிழமை, காலை: 08.00 மணி .இடம்: YMCA ஹால், ரித்தர்டன் சாலை, டவுட்டன்.

தலைமை: V. சுதாகர் (பகுதி கழகச் செயலாளர்)

20 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் கூடிய திருமணங்கள் நடத்தி வைப்பவர் : மாண்புமிகு **எ.வ.வேலு** (பொதுப்பணித்துறை அமைச்சர்)

அன்புடன்: 58, 58 'அ' வட்ட திமுக. எழும்பூர் தெற்கு பகுதி

**சூரியச்சுடர் 2**
**கொதிக்கும் உணர்வே போர்த்திறம்**
**கொள்கையின் வார்ப்பே திராவிடம்**

நாள்: 22.02.2024 வியாழக்கிழமை, மாலை: 4.00 மணி. இடம்: செல்லப்பா தெரு, ஒட்டேரி.

தலைமை: எஸ். சசிகுமார், (வட்ட கழக செயலாளர்)

400 அப்பளத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர் : மாண்புமிகு **டி.ஆர்.பி.ராஜா** (தொழில்துறை அமைச்சர்)

அன்புடன்: 76, 76'அ' வட்ட திமுக திரு.வி.க.நகர் தெற்கு பகுதி

**சூரியச்சுடர் 3**
**ஸ்ரீபாதம் தாங்கும் பக்தர்கள்**
**திராவிட முதல்வரின் சொந்தங்கள்**

நாள்: 22.02.2024, வியாழக்கிழமை, மாலை: 06.00 மணி. இடம்: ராஜா அண்ணாமலை மன்றம், பாரிமுனை.

தலைமை: பி.ஸ்ரீராமுலு, எம்.சி., (பகுதி பொருளாளர், 5வது மண்டலக்குழு தலைவர்)

250 ஸ்ரீபாதம் தாங்குபவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர் மாண்புமிகு **சிவ.வீ.மெய்யநாதன்** (சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்)

அன்புடன்: 59, 59 'அ' வட்ட திமுக துறைமுகம் மேற்கு பகுதி

**சூரியச்சுடர் 4**
**சமூக தாகம் தீர்ப்போம்**
**சுகாதாரத்தை காப்போம்**

நாள்: 23.02.2024, வெள்ளிக்கிழமை, காலை: 8.மணி, இடம்: டன்லப் மைதானம், அம்பத்தூர்.

தலைமை: பி.கே.மூர்த்தி, எம்.சி., (தலைமை செயற்குழு உறுப்பினர்)

771 குழுநீர்வடிகால் வாரியத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர் : மாண்புமிகு **கே.என்.நேரு** (நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்)

அன்புடன்: 83வது வட்ட திமுக அம்பத்தூர் வடக்கு பகுதி

**சூரியச்சுடர் 5**
**உழைப்பை தாங்கி நடப்பவர்**
**ஒவ்வொரு நெஞ்சிலும் உதிப்பவர்**

நாள்: 23.02.2024, வெள்ளிக்கிழமை, மாலை: 04.00 மணி.இடம்: எவர்வின் பள்ளி வளாகம், ஜமாலியா

தலைமை: மா.ருத்ரமூர்த்தி (வட்டக் கழகச் செயலாளர்)

271 காலணி தைப்பவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர் : மாண்புமிகு **கயல்விழி செல்வராஜ்** (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)

அன்புடன்: 71'அ' வட்ட திமுக திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

**சூரியச்சுடர் 6**
**தெருவோர வியாபாரிகள் குறைதீர்ப்போம்**
**திராவிட மணம் வீசும் மலர் கொடுப்போம்**

நாள்: 23.02.2024 வெள்ளிக்கிழமை, மாலை: 5.00 மணி.இடம்: ஜீஸ் தெரு, பிராட்வே

தலைமை: வெ.பரிமளம், எம்.சி., (பகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர்)

250 சாலையோர சிறுவியாபாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர் : **கவிஞர் காசி.முத்துமாணிக்கம்** (கழக வர்த்தகர் அணிச்செயலாளர்)

அன்புடன்: 56, 56'அ' வட்ட திமுக துறைமுகம் கிழக்கு பகுதி

**சூரியச்சுடர் 7**
**பரிசோதித்து உயிர் காப்போம்**
**பயன்கள் செய்து நலம் காப்போம்**

நாள்: 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை: 8.00 மணி.

இடம்: S.S.மகால், 70 அடி சாலை, ஜவகர் நகர்

